# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஏப்ரல் - 2024

தனிப்பிரதி ரூ.20







# மகளிர் மாநில சிறப்பு மாநாடு 09.03.2024



# மாநாட்டு நிகழ்வுகள்













# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2024 ஏப்ரல்**

**மலர்:45 இதழ்:04**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.


இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


## உள்ளே...


1. **தீவீரமாக சிந்தித்து தீர்க்கமான முடிவெடுப்போம்!** தலைவர் மடல் ............................4
2. **இந்தியாவை பாதுகாக்க ஓரணியில் திரள்வோம்...** பொதுச் செயலாளர் மேசையிலிருந்து............................9
3. **ஊழியர்களின் மனநிலையும் ஜனநாயக கடமையும்...**.....................17
4. **"எட்டேகால் லட்சணமே... எமனேறும் பரியே..."** .......................19
5. **நல்லதோர் வீணை செய்வோம்!** .......................21
6. **நேர்வது தேர்தலில் மாற்றம் தந்து**........24
7. **இனி அரசு ஊழியர் சங்கத்தினை அர்ப்பணிப்பு உணர்வோடும், ஆளுமை திறத்தோடும் வழி நடத்துவார்கள் பெண்கள்!** ................25
8. **பெருமை கொள்கின்றேன்; பேருவகை அடைகின்றேன்!** .............28
9. **இந்தியா ஒன்றுபடும்! 'இந்தியா' வெல்லும்!!** .....................30
10. **கருத்தரங்கம் மற்றும் பணி நிறைவு பாராட்டு விழா** ............................32
11. **சங்க நிகழ்வுகள்** ............................33
12. **வெற்றிக்கனியை பெற்றிடுவோம்** ............................34

# தீவீரமாக சிந்தித்து தீர்க்கமான முடிவெடுப்போம்!

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரங்கள் உச்சகட்டத்தை அடைந்துள்ளன. எல்லா கட்சிகளும், தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தரணியில் பாலாறும் தேனாறும் ஓடும் என்ற வாக்குறுதிகளை அள்ளிவீசி வருகின்றன. பொதுவாக எல்லாத் தேர்தல்களிலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பங்களிப்பும், வாக்களிப்பும் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் சக்தியாக இருந்துள்ளது என்பது நுணுக்க அரசியலில் கைதேர்ந்த அரசியல் கட்சிகளுக்குத் தெரியும்.

இன்றுள்ள சூழ்நிலை மிகவும் துரதிருஷ்டவசமானதுதான். நடுநிலையாளர்களாக இருக்கும் ஒவ்வொரு அரசு ஊழியரும் ஆசிரியரும் யாருக்கு வாக்களிப்பது என்ற இரண்டும்கெட்டான் மனநிலையில் உள்ளனர். காரணம் சுலபமானதுதான். சென்ற சட்டமன்றத் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அரசு ஊழியர்களின் ஆசிரியர்களின் ஆதரவைப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட இதுவரை நிறைவேற்றவில்லை என்ற கோபம்தான். சொன்ன சொல்லை காப்பாற்றாத கட்சிக்கு வாக்களிப்பது சரியானதாக இருக்குமா என்ற கேள்வி நியாயமானதுதான்.

கடந்த மூன்றாண்களாக நாம் தமிழ்நாடு அரசாங்கத்துடன் பலவிதமான போராட்டங்களை நாம் நடத்தியிக்கிறோம். முதலமைச்சர் நேரடியாக சந்தித்த எல்லா தருணங்களிலும் இன்றுவரை தான் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதை நேர்மையாக ஒப்புக் கொண்டிருக்கிறார். அதேசமயம் ''உங்களுடைய கோரிக்கைகளை நான் நிறைவேற்றாமல் வேறு யார் நிறைவேற்றப் போகிறார்கள், வேறு யாரால் நிறைவேற்றமுடியும்?'' என்றும் கேட்கிறார். பொறுத்திருங்கள் என்கிறார்.

ஒருபுறம் அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாக மதித்து அவர்களை அழைத்துக்கூட பேச விரும்பாத... ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பெறுகின்ற ஊதியத்தை கொச்சை படுத்திப் பேசும் இன்றுவரை அரசு ஊழியர்களுக்காக அவர்கள் உரிமைகளுக்காக ஒரு வார்த்தைகூட பேசாத அதிமுக கட்சியின் எடப்பாடி பழனிச்சாமியும் மறுபுறம் அரசுத்துறைகளை ஒழித்துக்கட்டி அனைத்தையும் தனியார்மயமாக்கிவிடும்... ஓய்வூதியம், ஊதிய மாற்றம் போன்றவற்றை ஒழித்துக்கட்டிட நினைக்கும் மோடியின் பாஜக அரசும் அதன் தமிழக தலைவர் அண்ணாமலையும் கைகோர்த்து நிற்கின்ற நிலையில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களுமாகிய நாம் நம்முடைய தேவைகளுக்காக மட்டும் பாராமல் நாட்டின் நலன்களுக்காகவும் யோசிக்க வேண்டிய நேரமிது. இந்தத் தேர்தல் யார் வெற்றிபெற வேண்டும் எந்த கட்சி இந்தியாவை ஆட்சி செய்ய வேண்டும் என்பதோடு முடிந்துவிடுகிற தேர்தல் மட்டுமல்ல அதைவிட முக்கியமாக இங்கே யார் இருக்கக்கூடாது என்கிற திடமான முடிவோடு நாமும், நம் குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் சேர்ந்து முடிவெடுக்க வேண்டிய தேர்தல் இது. இதற்கு அறுபது ஆண்டுகள் இந்தியாவை ஆண்ட காங்கிரஸ் கட்சி ஆட்சியையும், பத்து ஆண்டுகள் ஆண்டு கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியின் செயல்களையும் பட்டியல் படுத்தி பார்க்க வேண்டும்.

1947இல் குண்டூசிகூட செய்ய முடியாத நாடு இந்தியா. இந்தியா விடுதலை அடைந்தபோது உள்நாட்டு உற்பத்தி ஒரு சதவீதத்திற்கும்

கீழே இருந்தது. பசியும், பஞ்சமும், பெருந்தொற்று நோய்களும் நிரந்தரமாக இம்மண்ணைக் கவ்வியிருந்த காலம் அது. குடிநீர்வசதி, சாலைகள், மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், பெரு தொழிற்சாலைகள் என எவ்வித அடிப்படை வளர்ச்சிக் குறியீடுகளும் இல்லாத நேரம்.

சமூக நீதி, மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், பெண்ணுரிமை, பாலின சமத்துவம், பேச்சுரிமை, எழுத்துரிமை, வழிபாட்டு உரிமை, கருத்துச் சுதந்திரம் என்று எதைப்பற்றியும் அறியாத மக்கள் வாழ்ந்த தேசம். வெந்ததை திண்போம், விதி வந்தால் சாவோம் என்று வாழ்ந்த மக்களுக்கு பல இன்னல்களைத் தாங்கியும், தங்கள் இன்னுயிர் ஈந்தும் அரசியல் சுதந்திரத்தை பெற்றுத்தந்தனர் சுயநலம் அறியாத் தலைவர்கள். காந்தி, நேரு, காமராஜ் போன்ற தேசியத் தலைவர்கள். பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி நாட்டிற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தினர். அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்டத்தை இந்திய தேசத்திற்காக பலதரப்பட்ட மக்களின் உரிமைகளை சமத்துவப்படுத்தி பல எதிர்ப்புகளுக்கிடையே உருவாக்கினார். சமூக நீதிக்கான பெரும் போராட்டங்களை முன்னெடுத்த தந்தை பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற திராவிட இயக்கத் தலைவர்கள் சமூக சுதந்திரத்திற்கான அடித்தளத்தை அமைத்தனர். ஏ.கே.கோபாலன், இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், ஜீவா, ஜோதிபாசு, கல்யாணசுந்தரம் போன்ற பொதுவுடமை இயக்கத் தலைவர்கள் அடித்தட்டு மக்கள், விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் மற்றும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளுக்காகப் போராடி அவர்களுக்கு சட்டப்பூர்வமான பல உரிமைகளைப் பெற்றுத் தந்தனர். அன்னை இந்திரா காந்தி இந்தியாவை ஜனநாயக, சோசலிச, மதச்சார்பற்ற, இறையாண்மை உள்ள குடியரசாக அறிவித்தார். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா மலர்ந்தது. வங்கிகள் தேசியமயமாயின, பிரம்மாண்டமான பல பொதுத்துறை நிறுவனங்களை உருவாயின. தமிழ்நாடு சமூக நீதிக்கான கல்வி மற்றும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டை இந்தியாவுக்கே அறிமுகப்படுத்தியது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு உணவு, கல்வி, வேலை வாய்ப்புகளுக்கான உரிமைகளை சட்டப்பூர்வமான உரிமைகளாக அறிவித்தது. உற்பத்தியைப் பெருக்கி வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தினோம். உலகமே நம்மை வியப்புடன் பார்த்தது.

தேசிய இயக்கமும், திராவிட இயக்கமும், பொதுவுடமை இயக்கமும் சில கொள்கைகளில் மாறுபட்டிருந்தாலும் சமூக ஒற்றுமையிலும், சமூக நீதியிலும், அடித்தட்டு மக்களுக்கான பொருளாதாரப் பாதுகாப்பிலும் ஒத்த கருத்திசைவு கொண்டிருந்தனர். இந்த மாபெரும் இயக்கங்களின் தலைவர்கள் தங்களை முன்னிறுத்தாமல் நாட்டையும், மக்களையும் மட்டுமே முன்னிலைப்படுத்தி தியாக வாழ்வு வாழ்ந்தனர். கருத்து வேறுபாடுகளையும், கொள்கை முரண்பாடுகளையும் தனி நபர் விருப்பு வெறுப்புகளாக ஒருநாளும் கருதவில்லை. கொள்கைகளிலும், கருத்தியல்களிலும் வேறுபட்டு ஒரே தளத்தில் பயணிக்கும் உரிமைகளை கொண்டாடினார்கள். ஒருவர், மற்றொருவரின் தியாகங்களையும் உழைப்பையும் மதித்தனர். இப்படிப்பட்ட தலைவர்களாலும், அவர்கள் தலைமையேற்று நடத்திய அரசியல் இயக்கங்களாலும் வழிநடத்தப்பட்ட இந்தியா ஜனநாயகப் பாதையில் வெற்றி நடைபோட்டு, பெரும் முன்னேற்றங்களைக் கண்டது. குண்டூசி கூட செய்ய இயலாத நிலையில் இருந்த பாரதம் விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவியது. ஐஐடிகள், ஐஐஎம்கள், ஐஐஎஸ்சி மற்றும் ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்கள் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் உருவாகின.

ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஓஎன்ஜிசி, இந்தியன் ஆயில், பாரத் ஹெவி எலக்டிரிக்கல்ஸ், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் போன்ற 252 பொதுத்துறை நிறுவனங்கள்

உருவாக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான பட்டியல் இனமக்கள், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின மக்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றனர். மொழிவாரி மாநிலங்கள் உருவான பின்னர் மாநில அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு அடிப்படை வசதிகளைப் பெருக்கினர். முதலீடுகளை ஈர்த்தனர்.

வடஇந்திய மாநிலங்கள் சாதிமத மோதல்களில் ஈடுபட்டு முன்னேற்றப் பாதைகளில் பயணிக்கத் தவறிய காலங்களில் தமிழ்நாடு உட்பட்ட தென்மாநிலங்கள் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தின. இந்தியாவின் தனிநபர் வருமானம் வேகமாக வளர்ந்தது. பொருளாதார உற்பத்தி கூடியது. ஏற்றுமதி பெருகியது. அந்நியச் செலாவணி இருப்பு அதிகரித்தது. அரசு நிர்வாகம் தனக்கு விதிக்கப்பட்ட அதிகார எல்லைகளை கடந்த வேளைகளிலும், அதிகார வர்க்கம் எதேச்சதிகாரமாக நடக்க முற்பட்ட வேளைகளிலும், தனிமனித உரிமைகள் பாதிக்கப்பட்ட நேரங்களிலும் நமது அரசியல் சாசன சட்டம் உருவாக்கிய நாடாளுமன்றங்கள், சட்ட மன்றங்கள், உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், தேர்தல் ஆணையம் போன்ற தன்னாட்சி அமைப்புகள் தலையிட்டு, தவறுகளை சுட்டிக் காட்டி தகுந்த தீர்வுகளை வழங்கி வந்தன.

மோடியின் தலைமையிலான பாஜக அரசு, ஆட்சிக்கு வந்தபின் நாம் உருவாக்கி வைத்துள்ள நம் லட்சிய தேசத்தின் ஒவ்வொரு கட்டமைப்பையும் சிதைக்க முற்பட்டு வருகிறது. ஜனநாயகத்தை பெரும்பான்மைவாதமாக மாற்ற முயற்சிக்கிறது. மொழியாலும், மதத்தாலும், மாநிலங்களாலும் பிரிந்திருந்த போதிலும் தேசத்தால் ஒன்றுபட்டிருந்த மக்களை மதம், சாதி, மொழி அடிப்படையில் பிரித்து வைக்க துடிக்கிறது. இட ஒதுக்கீடு, தொழிலாளர் நலச் சட்டங்கள் போன்ற முன்னெடுப்புகளால் அடித்தட்டு மக்கள் பெற்றுவந்த உரிமைகளை பறித்து அவர்களை ஆதிக்க சாதியினரிடமும், கார்ப்பரேட் பெருமுதலாளிகளிடமும் மீண்டும் அடிமைகளாக்க முயற்சிக்கிறது. ஏழைகளிடமிருந்து கல்வியைப் பறிக்க முயற்சிக்கிறது. தேச உடமையாக்கப்பட்ட வங்கிகளில் இருக்கும் பொதுமக்களின் சேமிப்பை பெரு முதலாளிகளுக்கு வராக்கடனாக வாரிவழங்குகிறது. இயற்கை வளங்களை பன்னாட்டுக் கம்பெனிகள் கொள்ளையிட அனுமதி தருகிறது. பொதுத்துறை, நிறுவனங்களை தனக்கு வேண்டிய பெருமுதலாளிகளுக்கு மலிவு விலையில் தாரைவார்க்கிறது. மதச்சிறுபான்மையினரை பெரும்பான்மை மக்களுக்கு எதிரிகளாகக் கட்டமைக்கிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றழைக்கப்படும் செய்தி ஊடகங்களை முழுமையாக முடக்கிப்போட்டு, உண்மை நிலவரங்கள் மக்களுக்குத் தெரியாமல் பார்த்துக்கொள்கிறது.

கூட்டாட்சித் தத்துவத்தின் ஆன்மாவைக் கொன்று, பாஜக அல்லாத மாநில அரசுகளை சித்ரவதை செய்து, அவற்றின் நிர்வாகத்தை முடக்கி, மாநில அரசுகளை நகர்மன்றங்களை விட கேவலமாக நடத்துகிறது. மக்களது கடுமையான உழைப்பாலும், அம்மாநில அரசுகளின் சிறந்த நிர்வாகத்தினாலும் மாநில உற்பத்தித் திறனைக் கூட்டி வரி வருவாயினைப் பெருக்கிய தென்மாநிலங்களுக்கு ஒன்றிய வரித் தொகுப்பிலிருந்து அவர்களுக்கு தகுதியான நிதிப் பங்கீட்டை வழங்காமல் தங்களது அரசியல் விளைநிலங்களாக இருக்கும் சில வட இந்திய மாநிலங்களுக்கு வரைமுறையில்லாமல் நிதிகளை வாரி வழங்குகிறது. வரிப் பங்கீட்டில் மாநிலங்களுக்கு உரிய பங்கினை வழங்காத வகையில் வரிகளை செஸ் மற்றும் சர்சார்ஜ் கட்டணங்களாக லட்சக்கணக்கான கோடிகளை வசூலித்து அதனது விருப்பத்திற்கேற்ப செலவழிக்கிறது.

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணையம், பல்கலைக் கழகங்கள், லோக்பால், மனித உரிமை ஆணையம், திரைப்படத் தணிக்கைத்துறை, வருமான வரித்துறை, வருவாய் புலனாய்வுத் துறை, சிபிஐ, தேசிய புலனாய்வு முகமை, வெளிநாட்டுத் தூதரகங்கள் என்று அனைத்து அரசு நிர்வாக அமைப்புகளிலும் தகுதியான நபர்களை நியமிக்காமல், தங்களது அரசியல்

தத்துவங்களுக்கு நெருக்கமானவர்களையும், தங்களது பதவிகளில் நீடிப்பதற்கும், பதவி உயர்வுக்கும் எதையும் செய்யத்துணியும் மனச்சாட்சியற்றவர்களை நியமித்து ஊக்குவிக்குகிறது. தமிழ்நாடு உள்ளடக்கிய தென்மாநிலங்களில் ஏற்படும் ஒன்றிய அரசு நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளை தமிழ்நாடு இளைஞர்களிடம் இருந்து பறித்து பின்வாசல் வழியாக வடமாநில இளைஞர்களை பணியமர்த்துகிறது. மாற்றுச் சித்தாந்தங்களை உடையவர்களையும், சுதந்திரமாகச் செயல்படும் ஊடகவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும், தொண்டு நிறுவனங்களை நடத்துகின்றவர்களையும், பொய்வழக்குப் போட்டு பிணையில் வர முடியாத வழக்குகளில் சிக்கவைத்து, விசாரணையின்றி வருடக்கணக்கில் சிறையிலடைக்கிறது.

மொத்தத்தில் நமது அரசியல் சாசன சட்டத்தை உயிரிழக்கச் செய்து, ஜனநாயகத்தை பாசிச பெரும்பான்மைவாதமாக மாற்றி, ஜனநாயக நிறுவனங்களை சிதைத்து நாம் போராடிப் பெற்ற ஜனநாயக குடியரசை ஒரு சர்வாதிகார அரசாக மாற்றும் முயற்சிகளில் ஒவ்வொரு நாளும் ஈடுபட்டு வருகின்றது. பல மதங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்கள், பல இனக்குழுக்கள் இருந்தாலும் வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டு ஒரு பன்முகக் கலாச்சாரத்தை கொண்டாடும் நம்மிடம் ஒரு ஒற்றைக் கலாச்சாரத்தை திணிக்க அனைத்து முனைகளிலும் முயன்றுவருகிறது. "ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம் "என்று நமது குடியரசின் ஆன்மாவைக் கொலை செய்ய திட்டமிடுகிறது. இந்திய அரசியலில் "ஒற்றைக் கட்சியின்" ஆட்சியை ஏற்படுத்த திட்டமிடுவதால் மற்ற ஜனநாயக இயக்கங்களை அழிக்க முற்படுகிறது. காங்கிரஸ் இல்லாத பாரதம், கம்யூனிஸ்ட்கள் இல்லாத இந்தியா, கழகங்கள் இல்லாத தமிழகம் என்று இந்த தேசத்தைக் கட்டமைத்த ஜனநாயக இயக்கங்கள் அனைத்தையும் ஒழித்துவிட்டு பாஜக கட்சியையும் இந்திய ஆட்சியையும் ஒரே அமைப்பின்கீழ் கொண்டுவர திட்டமிடுகிறது. மோடியின் 10 ஆண்டு கால ஆட்சியில் விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் கூட தள்ளுபடி செய்யவில்லை. மாணவர்கள் வாங்கிய கல்விக் கடன்கள் தள்ளுபடி செய்யபடவில்லை. சிறு, குறு நிறுவனங்களின் உரிமையாளர்கள் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்ய வில்லை. பட்டாசு ஆலை உரி மையாளர்கள் பெற்ற வங்கிக் கடன்கள் தள்ளுபடியாக வில்லை. ஆனால், அம்பானி, அதானி உள்ளிட்ட பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வங்கிகளில் வாங்கிய ரூ.15 லட்சம் கோடி கடன்களை பிரதமர் மோடி தள்ளுபடி செய்துள்ளார். அந்த பெரும் நிதியை வைத்து ஏராளமான திட்டங்களை செய்திருக்கலாம். இந்தியாவில் உள்ள அனைவருக்கும் கான்கிரீட் வீடுகளை கட்டி தந்திருக்கலாம். தரிசாக கிடக்கும் அனைத்து நிலங்களையும் முப்போகம் விளையும் நிலங்களாக மாற்றியிருக்க முடியும். ஆனால், பாஜசு அரசு, இந்தியாவின் சொத்துகளான விமான நிலையங்கள், விமானங்கள், ரயில்கள், ரயில் தண்டவாளங்கள், ரயில்வே நிலங்கள் என அனைத்தை யும் விற்கத் துடிக்கிறது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வக்காலத்து வாங்கும் ஆட்சியாக பாஜக ஆட்சி உள்ளது.

இந்தியாவில் அறிவிக்கப்படாத அவசர நிலை அமலில் உள்ளது. அவசர நிலை காலத்தில் கூட முதலமைச்சர்களைக் கைது செய்யவில்லை. தற்போது இரண்டு முதலமைச்சர்களைக் கைது செய்துள்ளனர். அமலாக்கத்துறை பாஜகவின் உண்மையான கூட்டணியாக உள்ளது. தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகளை வருமான வரித்துறை முடக்கி உள்ளது. தேர்தல் ஆணையம் நடுநிலையாக செயல்படவில்லை. மோடியின் பிரச்சாரத்திற்கு வசதியாக தேர்தல் அட்டவணை தயாரிக்கப்பட்டு உள்ளது. தேர்தலை நேர்மையாக நடத்தும் என தேர்தல் ஆணையத்தை நம்ப முடியவில்லை. தமிழ்நாட்டில் 8 மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின. பாதிக்கப்பட்ட மக்களில் 95 விழுக்காட்டினர் இந்துவாக இருந்தாலும், ஒன்றிய அரசு நிவாரண நிதி தர மறுக்கிறது. மெட்ரோ ரயில் திட்டத் திற்கு நிதி ஒதுக்க மறுக்கிறது. மதுரை எய்ம்ஸ் ஒன்றை

செங்கலோடு நிற்கிறது. தமிழ் நாட்டில் உள்ள 69 மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை ஒன்றிய அரசு தான் தீர்மானிக்கும் என்கிது. சமஸ்கிருத வளர்ச்சிக்கு 643 கோடி ரூபாய் ஒதுக்கிய ஒன்றிய அரசு, தமிழ் உள்ளிட்ட 5 மொழி களுக்கு 29 கோடி ரூபாய்தான் ஒதுக்கியது.

தமிழ் மொழி பற்றி பேசும் பிரதமர், உயர்நீதி மன்றத்தில் அலுவல் மொழியாக மாற்றவும், நீதிமன்றத்தின் பெயரை மாற்றவும் மறுக்கிறார். சிஏஏ என்ற பெயரில் இலங்கைத் தமிழருக்கு குடியுரிமை மறுக்கப்படுகிறது. 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு எந்த ஒரு சிறப்பு திட்டத்தையும் மோடி கொண்டு வரவில்லை. நாடு அச்சுறுத்தலை சந்தித்து வரும் நிலையில், நடைபெறும் இந்த மக்களவைத் தேர்தல் மிக முக்கியமானது. நாட்டின் ஜனநாயகத்தையும், மதச்சார்பற்ற தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டும். வாக்கு சேகரிப்பதற்காக பலமுறை தமிழகத்திற்கு வரும் பிரதமர் மோடி தமிழகம் மழை-வெள்ளத்தால் பாதிக்கப் பட்டபோது ஒரு முறைகூட வரவில்லை என்பது மட்டுமல்ல ஒரு பைசா கூட அவர் நிவாரண நிதி தரவில்லை என்பதிலிருந்து அவர் தமிழகத்தை எந்த இடத்தில் வைத்திருக்கிறார் என்பது புரியும். மோடி தமிழகத்திற்கு என்ன செய்தார் என்பது குறித்து அவர் தெளிவான வாக்குறுதியை அளிக்கவில்லை. தமிழகத்தை மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடத்துகிறார். சிஏஏ சட்டத்திருத்தத்தால் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பத்திர நன்கொடைகள் பற்றிய தகவல்கள், இந்தியா மாபெரும் ஆபத்தினை நோக்கிப் பயணிக்கிறது என்பதினை நமக்கு உணர்த்தியுள்ளது. சி.பி.ஐ. வருமான வரித்துறை, வருவாய் புலனாய்வுத் துறை என்ற பெரும் அதிகாரங்களைக் கொண்ட அமைப்புகளை, இந்த நாட்டின் பெரும் பணக்காரர்கள் மீது ஏவி, மிரட்டி, சிறையிலடைத்து, சித்ரவதை செய்து தங்களது கட்சிக்கு எவ்வாறு தேர்தல் நிதியினைக் குவித்துள்ளார்கள் என்று நாம் அறிய வருகின்ற தகவல்கள் இந்தியாவின் ஆன்மாவையே கலங்கடித்துள்ளன. இவ்வாறு குவிக்கப்பட்ட பெரும் நிதியால் தேர்தல்கள் மூலம் நமது நாட்டின் உயிர் மூச்சான ஜனநாயகத்தைக் கொலை செய்ய அவர்கள் போட்டுள்ள திட்டம் உச்சநீதிமன்றத்தின் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்த பேரழிவைத் தடுத்து நிறுத்தும் பொறுப்பு நம் ஒவ்வொருவரின் கைகளிலும் அளிக்கப் பட்டுள்ளது. ஏனவே நாம் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் கவனமாக செயல்பட்டு நம்முடைய நலனையும் இந்தியாவின் நலனையும் முன்னிட்டு யார் இந்நாட்டின் பிரதமராக வரவேண்டும் என்பதை தீவீரமாக சிந்தித்து தீர்க்கமான முடிவெடுப்போம். ●

## சூடா ஒரு கோப்பை சூப்

### நீயே தான் எஜமான்!

தேர்தலென்று வந்துவிட்டால்
தேளின் கொடுக்கில்
தேன் வரும் என்பான்;
தெருக் குழாயில்
பால் வரும் என்பான்!

காலென்று சொல்லி உன்
கையைப் பிடிப்பான்;
காரியம் ஆனதும்
கழுத்தை நெரிப்பான்!

குடிசைக்குள் கால் வைப்பான்;
குழந்தைக்கும் பேர் வைப்பான்;
தேர்தல் முடிந்து விட்டால் உன்
கூரைக்கு தீ வைப்பான்!

தெளிந்து நில்
தேர்தலென்று வந்துவிட்டால்
நீயே தான் எஜமானன்;
சபலம் கொண்டு சாய்ந்து விட்டால் – நீ
அஞ்சு வருஷத்து அடமானம்!

# இந்தியாவை பாதுகாக்க ஓரணியில் திரள்வோம்..!

“அரசியலை நாம்
தவிர்ப்போமானல்
நம்மால்
தவிர்க்கப்பட
வேண்டியவர்கள்
நம்மை ஆள
நேரிடும்”

முன்னெப்போதையும் விட வெயில் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு தேர்தல். விரக்தியில் வெப்பம் வேறு அலையாய் தகித்துக்கொண்டிருக்கிறது. அது தமிழகத்தில் பல கிராமங்களில், நகரங்களைவிட தலைநகரம் சென்னையில் மிக கூடுதலாகவே உள்ளது. சென்னை மாநகரம் எங்கும் தேர்தல் ஆணையத்தின் நூறு சதம் வாக்களிப்போம். என் வாக்குஎன் வாழ்க்கை. என் வாக்குவிற்பனைக்கு அல்ல. ஏப்ரல் 19ல் வாக்களிக்க தவறாதீர்கள் என்று பல வாசகங்களோடு பிளக்ஸ் போர்டுகள் பளிச்சிட்டுக்கொண்டிருக்கின்றன.

சென்னை மாநகரத்தில் மையமான அந்த சந்திப்பில் தேசப்பிதா மகாத்மா காந்தி, நேரு, வ.உ.சி, பாரதி என தேசத் தலைவர்கள் பலரின் புகைப்படம் கூடிய ஒரு விளம்பர பிளக்ஸ் போர்டு வைக்கப்பட்டுள்ளது. அதன் கீழே மாபெரும் தேசத் தலைவர்கள் போராடிப் பெற்றுத் தந்த சுதந்திரத்தை, ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் வாக்களிப்பேம் என்று எழுதப்பட்டுள்ளது. தேச விடுதலை என்பது மகத்தான போராட்டங்களினால்தான் கிடைத்ததே என்பதை ஏற்றுக் கொண்டார்களே.... என்ற வ்யில் பரவாயில்லை. தேச விடுதலை மட்டுமல்ல, உழைப்பாளிகள் இன்று பெற்று வரும் ஒவ்வொரு உரிமையும் கூட மகத்தான போராட்டங்களில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.... துணை நின்றவர்கள்.... ஆதரவுக்கரம் நீட்டியவர்கள்....என இவர்கள் எல்லோரும் போற்றுதலுக்குரியவர்களே. நம் நெஞ்சில் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டியவர்களே...

இந்நிலையில் நம்முன் உள்ள அடுத்த கட்ட கடமைகளை நிறைவேறற களமிறங்க வேண்டிய இன்றைய சூழலில் எந்த நிகழ்வுகளையும் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகள் குறித்தும் காரணங்கள் குறித்தும் அசை போடவேண்டியது அவசியமான ஒன்றே. அந்த வகையில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளோம். ஆனால் அவர்கள் ஆட்சியில் இருந்தவரை நமது கோரிக்கைகள் ஒன்றைக்கூட நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக நமது வாழ்வாதாரக் கோரிக்கையான புதிய பென்சன் திட்டம் குறித்து தேர்தல் அறிக்கையில் கூட இடம் பெறவில்லை. அது மட்டுமல்ல. குறைந்தபட்சம் சந்திக்க மறுத்தார். அதை தொடர்ந்து ஜாக்டோ-ஜியோவின் கோரிக்கை மனுவைக்கூட வாங்க மறுத்தார் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். அதுபோல் போராட்டம் நடத்துகின்ற ஆசிரியர்களை 5ம் வகுப்பு ஆசிரியருக்கு 80 ஆயிரம் சம்பளம் என கேலியும், கிண்டலும் செய்து பேசியதோடு, தொழிற்சங்க, ஜனநாயகத்தை கேலி கூத்தாக்கினார். எனவே தான் தமிழக மக்களும், அரசு ஊழியர், ஆசிரியர்களும் 2021 சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் ஆட்சியிலிருந்து இறக்கி வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கினார்கள்.

அதைத்தொடர்ந்து தி.மு.க. 6வது முய்யாக ஆட்சி பொறுப்பை ஏற்றபோது இருந்த கடுமையான கொரோனா தொற்றுச் சூழலிலும் அரசுக்கு கடுமையான நிதி பற்றாக்குறை இருந்தாலும் அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கையை படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்.

மேலும் நமது சங்கத்தின் 14வது மாநில மாநாட்டிற்கும், ஜாக்டோ-ஜியோ மாநாட்டிற்கும் வருகை தந்து பேசியபோது தேர்தல் காலத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் உங்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி தருவோம் என்று தேர்தல் நேரத்தில் நான் வாக்குறுதி தந்தது உண்மைதான். நான் அதை மறுக்கவுமில்லை, மறைக்கவுமில்லை, மறக்கவுமில்லை என்றும் நாம் இருவரும் வேறு வேறு அல்ல என்று தான் குறிப்பிட்டேன். நாம் இருவரும் ஒரே மாதிரியாகவே சிந்திக்கிறோம். அதே நேரத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான உறுதிமொழிகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் பேசினார் என்பதை இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

அது மட்டுமல்ல. நமது சங்கத்தின் மாநில மாநாட்டிற்கு வருகை தந்த மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாநில நிர்வாகிகள் தலைமைச் செயலகத்தில் சந்திக்க சென்றபோது கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கொரோனாவை காரணம் காட்டி நிறுத்தி வைக்கப்பட்ட அகவிலைப்படி அறிவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் 14 சதவீதம் அகவிலைப்படியை உடனே அறிவித்தார் என்பதை மறக்க முடியாது.

கடந்த ஆட்சியின்போது பல்வேறு கோரிக்கைகள் முன் வைத்து போராட்டம் நடத்தியதற்காக பழிவாங்கப்பட்ட அரசு ஊழியர், ஆசிரியர்கள் மீதான நடவடிக்கைகள் தி.மு.க. அரசு அமைந்தவுடன் முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டது.

பணி மாறுதல் செய்யப்பட்டவர்களுக்கு பழைய இடங்களிலேயே பணி வழங்கியும், காவல் துறையில் போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற்றதும், போராட்டக் காலத்தை பணிக்காலமாக வரன்முறைப்படுத்தப்பட்டதும், தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்ப பாதுகாப்பு நிதி ரூ.3 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தப்பட்டதும் திமுக ஆட்சியில்தான் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்த வாழும் திருமணமாகாத மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினை கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தில் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டம் இந்த ஆட்சியில் தான்.

மேலும் இரண்டிற்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதத்திலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்டங்களையும் பல்வேறு சேவைகளையும் மக்களிடையே சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் பணி அரசு ஊழியர்களுடையது தான். எனவே 1.5.2021 முதல் 31.06.2022 வரை 10 ஆயிரத்து 338 புதிய பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2024-25ஆம் ஆண்டுடில் 50 ஆயிரம் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

மேலும் முதல்வர் அவர்கள் கூறியபடி ஒன்றிய அரசு அகவிலைப்படி அறிவிக்கும்போது மாநில அரசு ஊழியர்களுக்கும் அறிவிக்கப்படும் என்பது கடந்த 2023 ஜூலையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று அரசு ஆணை 101 ரத்து செய்தது. தனியார் பள்ளிகளை நிருவகிக்க தனியாக மாவட்டக் கல்வி அதிகாரி பணியிடமும் புதிதாக உருவாக்கம், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதுபோல் தமிழ்நாடு அரசு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்துள்ளது. மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து, 17 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், 1.15 கோடி குடும்ப தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/-, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/-, இல்லம் தேடிக் கல்வித் திட்டம்,1.65 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, 1கோடியே 70 ஆயிரம் பேர்களுக்கு மக்களை தேடி மருத்துவம, 20 லட்சம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி, நான் முதல்வன் திட்டம் இப்படி எண்ணற்ற திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி

இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று பல்வேறு பத்திரிகைகள் பாராட்டி உள்ளது நாம் அறிந்ததே.

இவ்வாறு இருக்க, அரசு ஊழியர், ஆசிரியர் கோரிக்கை குறித்து தி.மு.க. தலைமையிலான அரசிடம் அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் 7 முறை முதல்வரை சந்தித்து பேசி உள்ளோம். அப்பொழுதெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு ஊழியர், ஆசிரியர் கோரிக்கைகளை நிச்சயமாக தி.மு.க. அரசு நிறைவேற்றும் என்று நம்பிக்கை வார்த்தைகளை கூறினார். இருப்பினும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், ஜாக்டோ-ஜியோ அமைப்பின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்க்க பல்வேறு கட்ட இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இறுதியாக ஜாக்டோ-ஜியோ சார்பில் 6 கட்ட இயக்கம் முடிவு செய்யப்பட்டு குறிப்பாக ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மற்றும் 2024 பிப்ரவரி 26ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் நோக்கி சென்ற நேரத்தில் 13.02.2024 அன்று மூன்று அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் உத்திரவிட்டு மாண்புமிகு அமைச்சர்கள் எ.வ. வேலு, முத்துசாமி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்களுடன் 1.1/2 மணி நேரம் பேச்சுவார்த்தை நமது வாழ்வாதார கோரிக்கையான பழைய பென்சன் அமல்படுத்த வேண்டும், முடக்கப்பட்ட சரண்டர், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு, காலிப்பணியிடம், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலம் வரன்முறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து விரிவாக பேசப்பட்டது. இறுதியாக அமைச்சர் பெருமக்கள் உங்களது கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரிடம் கொண்டு சென்று உடனடியாக அழைத்துப்பேசி தீர்வு காணப்படும் என்ற உத்திராவதத்துடன் இந்த பேச்சுவார்த்தை முடிந்தது. அதன் பின்பு மாண்புமிகு நிதி அமைச்சர் மூலம் அரசின் சார்பில் ஒரு அறிக்கை வெளி வந்தது. அந்த அறிக்கை முழுமையாக திருப்தி அளிக்க கூடிய வகையில் இல்லை. எனவே அதை நிராகரித்து ஜாக்டோ-ஜியோ சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது.

அதனை தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.02.2024 காலை 10 மணிக்கு தலைமைச் செயலகத்தில் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரையும் சந்திக்கிறார். எனவே அனைவரும் வரவேண்டும் என்று அரசு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

14.2.2024 காலை 12 மணிக்கு தலைமை செயலகத்தில் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை மூன்று பிரிவாக சந்தித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது உங்களுடைய கோரிக்கைகள் அத்தனையும் நிறைவேற்றப்படும். அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கையை நான் நிறைவேற்றவில்லை என்றால் வேறு யார் நிறைவேற்றுவார்கள். கண்டிப்பாக நிறைவேற்றுகிறேன் என்று நம்பிக்கையுடன் உறுதியளித்தார். முதலமைச்சர் சந்திப்பில் ஐந்து அமைச்சர்கள் மற்றும் அரசின் முதன்மைச் செயலாளர்கள் உடன் இருந்தார்கள். அதன் அடிப்படையில் தான் ஜாக்டோ-ஜியோ இயக்கங்கள் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது.

இதுவரை தமிழக வரலாற்றில் ஒரு காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவித்து தலைமை செயலாளர் அவர்கள் அனைத்துத் துறைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்ட பிறகு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அதுவும் முதலமைச்சருடன் சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த காலங்களில் அ.தி.மு.க. ஆட்சியில் அடக்குமுறையை ஏவி சந்திக்க மறுத்தார்கள், கோரிக்கை மனுக்களை வாங்க மறுத்தவர்கள் நமது கோரிக்கை அவர்களது கட்சி தேர்தல் அறிக்கையில் கூட இடம் பெறவில்லை. ஆனால் இன்று அவர்கள் அரசு ஊழியர், ஆசிரியர்கள் கோரிக்கை பற்றி பேசுவது விசித்திரமாக இருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்களிடம் உங்களது கோரிக்கையை நிச்சயமாக

நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்த நிலை இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2024 ஏப்ரல் மாத இந்து நாளிதழ் நேர்காணலில் சட்டப்பேரவை தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் படிப்படியாக நிறைவேற்றுவேன் என உத்தரவாதம் அளித்திருக்கிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் ஆட்சி சக்கரத்தை இயக்கக்கூடியவர்கள். இந்த அரசு எந்தளவு நிதி நெருக்கடியில் இருக்கிறது என்றும், இருந்தும் மெதுவாக மீணடு வருகிறது என்பதை அவர்கள் அறிவார்கள். மூன்றாண்டுகளுக்கு முன் இருந்த நிதி நெருக்கடியில் இருந்து மெல்ல மீண்டுள்ளது. எனவே அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகளும் நிறைவேறும் காலம் கனியும் என்று கூறியுள்ளார். மேற்கண்டவற்றை கருத்திற்கொண்டு தற்பொழுது நாம் செயல்பட வேண்டியுள்ளது.

இந்த நேரத்தில் இந்திய நாடாளுமன்றத்திற்கான 18வது பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. நாடுதழுவிய அளவிலும் மாநிலங்கள் அளவிலுமான கூட்டணிகள் அமைக்கப்பட்டு தேர்தல் பிரச்சாரங்களும் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இந்த நாட்டின் குடிமகன் என்ற முறையில் அரசு ஊழியர்கள், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இத்தேர்தலில் வாக்களித்து நமக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டியுள்ளது. இந்த ஜனநாயகக் கடமையினை நிறைவேற்ற தேர்தல் காலத்திலுள்ள அரசியல் கட்சிகளின் கடந்த கால செயல்பாடுகளையும், நிகழ்கால நடவடிக்கைகளையும் நாம் மதிப்பீடு செய்து நமது நாட்டின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வினை அளிக்கக்கூடியவர்களுக்கு நமது வாக்கினை அளிக்க வேண்டியுள்ளது.

இந்த 18வது நாடாளுமன்ற தேர்தல் என்பது தேசிய பிரச்சினைகளை முன்னிறுத்தி இப்பிரச்சினையை நாம் மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் தேசிய பிரச்சினைகளில் மாநில அளவிலான அரசியல் கட்சிகள் மேற்கொண்ட நிலைபாடுகளை நாம் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிடுவதற்கில்லை. அத்தகைய பரிசீலனைக்கான சில அடிப்படையான விசயங்களை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கன் கவனத்திற்கு கொண்டு வருவதே இப்போதைய நோக்கம்.

இந்திய பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால் ஊடகங்களும் இத்தேர்தல் இரு கட்சிகளுக்கிடையேயான போட்டியாகவே சித்தரிக்கக முற்படுகின்றன. அதிலும் குறிப்பாக கடந்தகால ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியைக் கணக்கில் கொண்ட பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வேறு கட்சிகளுக்கு மாற்றாக ஒன்றிய அரசை (பி.ஜே.பி.யை) முன்னிலைப்படுத்த முனைப்புடன செயல்பட்டு வருகின்றன.

ஒன்றிய அரசின் கடந்த 10ஆண்டு கால ஆட்சியில் இந்திய தேசம் எதை நோக்கி சென்று கொண்டு இருக்கிறது. என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

புதிய பொருளாதார கொள்கை உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம் மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற ஏகாதிபத்திய உந்துதல்களால் நிர்பத்திக்கப்பட்டு இந்தியாவில் 1991 முதல் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டு இன்று அதன்படி உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கல ஆகியவை ஆட்சியாளர்களின்தாரக மந்திரமாக மாறியுள்ளது. இதன் காரணமாக தொழில்களும் பெரும் செல்வமும் தேசத்தின் இயற்கை வளங்களும் பெரும் தனியார் நிறுவனங்களின் சொத்தாக மாறி வருகிறது. விலைவாசி உயர்வு, வேலையின்மை மற்றும் வறுமை ஆகியன நொந்து கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு பரிசாக கிடைத்துள்ளது.

**விலைவாசி உயர்வு**

அனைத்து அத்தியாவசியப் பொட்களின் விலையும் அன்றாடம் உயர்ந்து மக்களின் மீது பெரும் சுமையாக இறங்கியுள்ளது. குறிப்பாக பெட்ரோலியப் பொருட்களின் விலை

ஏற்றத்தால் கடந்த 9 ஆண்டுகளில் 3 ட்சம் கோடி லாபம், கேஸ் விலை உயர்வால் 33 ஆயிரம் கோடி லாபம் எட்டியுள்ளது ஒன்றிய அரசு. ஒவ்வொரு நாளும் விலை உயர்த்தப்படடு அதன் தொடர்ச்சியாக அனைத்து பொருட்களின் விலையும் கடுமையக உயர்ந்துள்ளது.(உ.த. 1989 ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.8/-ஆகவும் தற்பொழுது லிட்டருக்கு 103 ஆக இருக்கிறது. உணவின் விலை 65 சதவீதம் அதிகரித்துள்ளது) மேலும் இத்தகைய விலைவாசி உயர்வினால் கோடிக்கணக்கான மக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள் நிலையில் ரிலையன்ஸ் போன்ற சில தனியர் நிறுவனங்கள் அபரிமிதமான லாபத்தை ஈட்டி தங்களின் சொத்துக்களை பெருமளவில் பெருக்கி கொண்டுள்ளன.

#### வேலையின்மை

இந்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சக அறிக்கையின்படி நமது நாட்டில் மூன்றில் ஒரு பட்டதாரி வேலையின்றி இருக்கின்றனர். 20 - 24 வயது உள்ளோர் 48 சதவீதம் பேருக்கு வேலையில்லை. 9 ஆண்டுகளில் மத்திய அரசு பணிகளில் 72 ஆயிரம் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 90 கோடிபேரில் 61.2 சதவீதம் பேர் வேலை இல்லை. சர்வதேச தொழிலாளர் அமைப்பு(ILO) எச்சரிக்கை இன்னும் வரும் காலங்களில் 27 சதவீதம் குறையும் என்கிறது. அது மட்டும் அல்ல. 23.5 சதவீதம் பேர் வேலைக்கு தகுதியில்லை. அதுபோல் இந்தியாவல் ஒவ்வொரு நாளும் 115 தொழிலாளர்கள் தற்கொலைசெய்து கொள்கிறார்கள். இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என கூறினார். ஆனால் இந்தியாவில் 45 ஆண்டுகளில் இல்லாத வேலையின்மை அதிகரித்து கொண்டு இருக்கிறது. வேலையில்லா திண்டாட்டம் 8 சதவீதம் உயர்ந்துள்ளது. மீதமுள்ளோர் சுய வேலையிலோ அல்லது தினக்கூலிகளாகவோ இருக்கின்றனர். வேலையின்மையைப் பயன்படுத்தி கொண்டு ஒப்பந்த அடிப்படையிலான வேலைகள வழங்கப்படுகின்றன. இது இந்திய தொழிலாளர்களின் வாழ்க்கைததரம் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்துள்ளது.

மேலும் வேலையின்மை இளைஞர்கள் மத்தியில் சாதி, இன, மத மற்றும் மொழி வேறுபாடுகளை விதைப்பதற்கு ஒரு வளமான களத்தை ஏற்படுத்த பயன்படுத்தப்படுகிறது. வலதுசாரி அரசியல்வாதிகளாலும் விலைபோகும் சில தொழிற்சங்கத் தலைவர்களாலும் உழைப்பாளிகளின் மத்தியில் உள்ள ஒற்றுமையைச் சீர்குலைக்கவும், நிரந்தரத் தொழிலாளர்களுக்கு எதிராக ஒப்பந்தத் தொழிலாளர்களையும் உள்ளூர் தொழிலாளர்களையும் மோதலில் ஈடுபடுத்திட இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

#### தொழிலாளர் மீதான தாக்குதல்

வேலையின்மையும், விலைவாசி உயர்வும் நாட்டின் தொழிலாளர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்த காரணமாக உள்ளன. ஒன்றிய அரசு (பி.ஜே.பி) அந்நிய முதலீட்டாளர்கள் உள்ளிட்ட முதலாளித்துவ சக்திகளும், தொழிலாளர் நலச் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்துள்ளன. போராடிப்பெற்ற தொழிற்சங்க உரிமைகளும், ஜனநாயக உரிமைகளும் அல்லும் பகலும் பறிக்கப்படுகின்றன.

இப்பிரச்சினைகளின் மீது தீர்வு காண முற்படாத ஒன்றிய அரசு தொழிலாளர நலச் சட்டங்கள் 44யை 4 ஆக குறைத்து சட்டம் இயற்றுகிறது. பெரும் முதலாளிகளின் லாபத்தை உயர்த்திட நடுநிசியிலும் கண் துஞ்சாமல் இயங்குகிறது.(உ.த. 2014ல் முகேஷ் அம்பானி பணக்கார வரிசையில் 605வது இடத்தில் இருந்தார். இன்றைக்கு இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளார்.)

#### பெண்கள் மீதான தாக்குதல்

நாடு முழுவதும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் பரவலாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின்(பி.ஜே.பி) ஆட்சியில் பெண்களின் நிலை மிக மோசமாக இருக்கிறது. மல்யுத்த வீராங்கனைகள் மீதான பாலியல் வன்முறை, மணிப்பூர் பெண்கள் பாலியல் வல்லுறவு, உத்திரபிரதேச ஹத்ராவில் தலித் பெண் பாலியல் வல்லுறவு என்று சொல்லிக்கொண்டே போகலாம். தேசிய சிறப்பு ஆவணக் காப்பகத்தின் 2021ன்

அறிக்கையின்படி இந்தியாவில் 1 மணி நேரத்தில் 49 வன்கொடுமை, 89 பாலியல் வல்லுறவு நடைபெறுகின்றன என்கிறது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 16.5 சதவீதம் அதிகம். குறிப்பாக மத்திய பிரதேசம், உத்திரபிரதேசம் மிக அதிகமாக இருக்கிறது. ஜே. எஸ். வர்மா கமிஷன் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகளை பரிந்துரைத்து, அவை சட்டமாக்கப்பட்ட பிறகும் கூட இத்தகைய தாக்குதல் குறைந்ததிடவில்லை.

உழைக்கும் பெண்களைப் பொறுத்தவரையில் அரசின் புதிய திட்டங்களில் கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இவர்களுக்கு மிக குறைந்த தொகுப்பூதியம் கொடுக்கப்படுவதுடன் தொழிலாளர் என்ற அந்தஸ்தும் வழங்கப்படவில்லை. அதோடு பெண்களுக்கான ஊதிய சமத்துவம் இன்னும் ஒரு தொலைதூரக் கனவோகவே இருந்து வருகிறது.

பணியிடங்களில் பெண்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை ஒடுக்கும் வண்ணம் அமைக்கப்படவேண்டிய பணியிட அளவிலான குழுக்கள் அமைப்பதில் எந்தவித அக்கறையும் செலுத்தப்படவில்லை.

மகளிருக்கு நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா 30 ஆண்டுகள் கழித்து நிறைவேற்றப்பட்டாலும் பெண்களுக்கான உரிமைகளை வழங்குவதில் ஒன்றிய அரசு (பி.ஜே.பி.) அக்கறையற்ற போக்குடன் உள்ளது. (உலகில் பாலின வேறுபாட்டினை கடைபிடிக்காத நாடுகளில் 146ம் இடத்தில் இந்தியா உள்ளது.)

**பெரு நிறுவனங்களின் கொள்ளை**

இந்தியாவில் இயற்கை வளங்களையும், செல்வ வளங்களையும் இந்திய பெரு முதலாளித்துவ நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களும் கணக்கு வழக்கின்றி கொள்ளையடித்து வருகின்றன. ஒவ்வொரு பட்ஜெட்டிலும் கோடிக்கணக்கான ரூபாய்கள் ஊக்கத் தொகையாகவும், வரிச்சலுகையாகவும் பெரு நிறுவனங்களுக்கும், முதலாளிகளுக்கும் வாரி வழங்கப்படுகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் ஒன்றிய அரசு 10.6 லட்சம் கோடி தள்ளுபடி 33 சதவீதம் வரியை முதலாளிகளுக்கு 22 சதவீதமாக குறைக்கப்பட்டு பல லட்சம் கோடி முதலாளிகளுக்கு லாபம் ஒவ்வொரு நாளும் இந்திய முதலாளிகளுக்கு 449கோடி தள்ளுபடி, 2014ல் இந்தியாவின் கடன் 55 லட்சம் கோடி இன்று 205 லட்சம் கோடி கடன் உள்ளது. இதுதான் இந்தியாவின் வளர்ச்சியா? ஒட்டுமொத்த உற்பத்தியில் 40 சதவீதம் சொத்தினை 1 சதவீதம் முதலாளிகள் வைத்துள்ளார்கள். 50 சதவீதம் சொத்துகள் 3சதவீதம் முதலாளிகள் வைத்துள்ளார்கள். 30சதவிதம் மக்கள் வறுமையின் கீழ் உள்ளார்கள். இதையும் தாண்டி பொது மக்களின் வங்கி சேமிப்பு கணக்கில் குறைந்தபட்ச பணம் இல்லை என்று (Minimum Balance) இருக்கின்ற பணத்தையும் கொள்ளையடிக்கப்படுகிறது.

நமக்கெல்லாம் நினைவிருக்கும் 1998-99 முதல் 2003-2004 வரை பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்வதற்காகவே திரு. அருண்ஷோரி தலைமையில் தனியானதொரு அமைச்சகமே உருவாக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. அக்கால கட்டத்தில் தொடங்கி தற்பொழுது வரை பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கப்பட்டன.(உ.த. எல்.ஐ.சி)

**ஊழல்களும் முறைகேடுகளும்**

மூலதனம், அரசியல் அதிகாரம் மற்றும் அதிகார வர்க்கம் ஆகியவற்றிடையே ஒரு புனிதமற்ற கூட்டு சதி உருவாக்கப்பட்டு நாட்டின் இயற்கை வளங்களை பெரும் நிறுவனங்கள் கொள்ளையடிக்கும் போக்கிற்கு வானளாவிய ஊழயல்களுக்கும், மோசடிகளுக்கும், முறைகேடுகளுக்கும் இந்த நாட்டை இட்டுச் சென்றுள்ளது.

நாட்டின் ஊழலுக்கு எதிராக பெரும் போரை மேற்கொண்டு வருகிறேன் என்று பிரதமர் மோடி மீரட் நகரில் பேசியதாக பத்திரிகை செய்தி வெளி வருகிறது. அதுபோல் இன்னும் கொஞ்சம் மேலே போய் ஊழல்வாதிகள் எவ்வளவு பெரிய நபராக

இருந்தாலும் நடவடிக்கை உறுதியாக எடுக்கப்படும் என்றும் நாட்டை கொள்ளையடித்தவர்கள் அந்த பணத்தை திருப்பி தந்தாக வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

ஆனால் நாடாளுமன்றக் கூட்டத்தில் சி.ஏ.ஜி அறிக்கை பல லட்சம் கோடி ஊழலை அம்பலப்படுத்தியுள்ளது. அதில் ஒன்று தில்லி குர்கான் விரைவு சாலை அமைப்பதில் நடந்துள்ளது. இந்த சாலைக்கு அரசு அனுமதி அளித்தது ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடி. ஆனால் ஒப்பந்தகாரர்கள் பெற்றது 250 கோடி. தமிழ்நாட்டில் உள்ள ஐந்து டோல் கேட்களில் ரூ.125 கோடிகள் கொள்ளை. அதுபோல் பிரதமர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் இறந்த பின்னரும் சடலங்களுக்கு சிகிச்சை அளித்தாக பல கோடிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். ஊடகங்களில் ஒன்றிய அரசின் ஊழல்கள் வந்து கொண்டே இருக்கிறது. அதுதான் ரபேல் விமான ஊழல், பி.எ ம். கேர்ஸ், தேர்தல் பத்திரம் வேட்டையும் நடந்தேறியுள்ளது.

**அந்நிய மூலதனம் ஊடுருவல்**

இந்திய நாட்டின் கேந்திரமான துறைகளில் அந்நிய நேரடி முதலீடுகள் அந்நிய நிறுவன முதலீடுகள் ஆகியன ஒன்றிய அரசால் எவ்வித கட்டுப்பாடும் இன்றி அனுமதிக்கப்படுகின்றன. தேசத்தின் மிக முக்கியமான பாதுகாப்புத்துறையில் கூட அந்நிய மூலதனம் ஊடுருவல் அனுமதிக்கப்பட்டுள்ளது. வங்கித்துறையில்லும், காப்பீட்டுத்துறையிலும், ஓய்வூதிய நிதியிலும், சில்லரை வர்த்தகத்திலும், பன்னாட்டு பகாசூர நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்கான வகையில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான உச்சவரம்புகள் உயர்த்தப்படுகின்றன.

அதோடு வங்கித்துறையில் தனியார் வங்கிகளைத் தொடங்கவும், வெளிநாட்டு வங்கிகள் ஏற்கனவே உள்ள இந்திய வங்கிகளை கையகப்படுத்தவும் அனுமதிக்கக்கூடிய அபாயகரமான போக்கும் அரங்கேறியுள்ளது.

**ஓய்வூதியத்தின் மீதான தாக்குதல்**

அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் ஓய்வுகால வாழ்க்கைக்கு ஆதாரமான ஓய்வூதியத்தின் மீதான தாக்குதலை 2002ஆம் ஆண்டு ஒரு அறிக்கையின் மூலம் பா.ஜ.க. அரசு முன்மொழிந்தது. அடுத்து வந்த ஆட்சியாளர்கள் 2003 மார்ச் மாதத்தில் PFRDA மசோதாவை வழி மொழிந்தது.

ஆனால் 2005 முதல் 2009 முடிய நடைபெற்ற முதல் ஐக்கிய முற்போக்கு அரசின் காலத்தில் அந்த அரசு பதவியில் தொடர ஆதரவு அளித்த 64 இடதுசாரி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக இதனை சட்டமாக்க இயலவில்லை எனினும் 2013ல் இடதுசாரிக் கட்சிகளின் கடுமையான எதிர்ப்பையும் மீறி பிரதான எதிர்கட்சியான பா.ஜ.க.வின் ஆதரவோடு ஓய்வூதியத்தை தனியார்மயமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனால் புதிதாக சேர்ந்த ஊழியர்கள் மட்டுமின்றி ஏற்கனவே பணியில் இருக்கும் ஊழியர்களும் ஓய்வூதியர்களும் கூட கடுமையாக பாதிக்கக்கூடிய அபாயம் முன்னுக்கு வந்துள்ளது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவை குறித்த எந்த உத்திரவாதமும் இல்லை. அதோடு ஓய்வூதிய நிதி ஊக வணிகமான பங்குச் சந்தையில் முதலீடு செய்வதன் மூலம் ஓய்வூதியத்திற்கான எந்த உத்திரவாதமும் இல்லாமல் போய்விடுகிறது.

ஆனால் பல்வேறு மாநிலங்களில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் நடைமுறைப்படுத்தினால் (ராஜஸ்தான், சத்தீஸ்கர், இமாச்சலபிரதேசம், பஞ்சாப்) PFRDAவில் செலுத்திய பணத்தை மாநில அரசு கேட்டால் ஒன்றிய அரசு(பி. ஜே.பி) நிதி அமைச்சகம் தர மறுக்கிறது. இது மாநில அரசின் ஜனநாயக முடிவுக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுகிறது.

திரு ராகுல்காந்தி அவர்கள் தேர்தல் பரப்புரையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால்

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்வோம், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவோம் என்று உத்திரவாதம் அளித்துள்ளார். அதுபோல் காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களில் புதிய பென்சன் திட்டம் ரத்து செய்து பழைய பென்சன் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

எனவே அரசு ஊழியர, ஆசிரியர்கள் மேற்கண்ட விவரங்களோடு நமது சொந்த அனுபவங்களையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

நமக்காக மட்டும் அல்ல. நாட்டு மக்களையும் பாதுகாக்க நாடாளுமன்றத் தேர்தலில் நமது கடமையை செவ்வனே நிறைவேற்ற நாம் முன் நிற்போம். அனைத்து அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும், ஓய்வூதியர்களையும், இதரப்பகுதி உழைப்பாளி மக்களையும் , வாக்காள பெருமக்களையும் ஒன்றிணைப்போம். தமிழக வரலாற்றில் அரசியல் மாற்றத்தால் வரலாறு படைத்தவர்கள் என்ற சாதனையை இன்னொரு முறை நிருபித்து தமிழகத்தின் நலன்களை மட்டுமல்ல இந்திய நலன்களையும் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது. எனவே இந்தியாவை தனியார்மயத்திற்கும், மதவாத அரசியலுக்கும் ஆட்கொள்ளப்பார்க்கும் தீய சக்திகளையும் வேரறுக்க இந்த தேர்தல் களத்தில் உறுதி பூணுவோம்.

இந்த வரலாற்று பின்னணியை நாம் உணர்ந்து நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தல் நம்முடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் அனைவரும் நூறு சதவீதம் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று கூறியுள்ள நிலையில் தேர்தல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் நாம் ஜனநாயகக் கடமையிலிருந்து விலகாமல் சார்புத்தன்மையற்ற நேர்மையான தேர்தலை நடத்திக் கொண்டு வல்லமை படைத்த சக்தி என்பதை மறந்துவிடக் கூடாது.

எனவே வீதி மன்றத்தில் நாம் நடத்துகின்ற போராட்டங்கள் எவ்வளவு வலுவாக இருக்கிறதோ அதற்கு இணையாக நாடாளுமன்றத்திலும வலிமையான குரல் ஒலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது.

அந்த குரல்களை வலுப்படுத்த மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களை தேர்வு செய்ய வேண்டியது ஒவ்வொரு குடி மக்களின் அடிப்படை கடமையாகும். அந்த வகையில் அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் நமது வாழ்வாதார கோரிக்கையாக புதிய பென்சனை ரத்து செய்து பழைய பென்சன் வழங்கப்படும், சரண்டர் விடுப்பு, சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் தொகுப்பூதியத்தில் உள்ள ஊழியர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்கப்படும், இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம், காலிப்பணியிடம் நிரப்பப்படும்,

பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்துள்ள அரசியல் கட்சிகளை இனம் கண்டு மேற்கண்ட உண்மைகளை உணர்ந்த அத்தகைய உயர்வுகளோடு 2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் குடும்பத்தோடு வாக்களிக்க உறுதியேற்போம். தபால் வாக்குகளை தவறாமல் பதிவு செய்திட முழு முயற்சி செய்வோம்.

இதன் மூலமாக இந்திய அரசியல் அரங்கில் புதியதோர் வரலாற்றைப் படைப்பதற்கு நமக்கு கிடைத்துள்ள வாய்ப்பை நாடாளுமன்றத் தேர்தலில் நாம் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஊழலற்ற, மக்கள் மீது உண்மையான அக்கறைகொண்ட உழைக்கும் மக்கள் முதல் உலகோர் போற்றும் தூய்மையான, நேர்மையான ஆட்சி காண நாமும் நம் குடும்பத்தினரும் வாக்களிப்பதோடு நின்றுவிடாமல் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கி 100 சதவீதம் வாக்களிக்கச் செய்து இந்திய மக்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் கடமையை நிறைவேற்ற முற்படுவோம்.

●

# ஊழியர்களின் மனநிலையும் ஜனநாயக கடமையும்..!

மு. பாஸ்கரன்

அரசு ஊழியர்களே....

ஆசிரியர்களே....

நமது நியாயமான கோபத்தை....

தமிழக அரசின் மீது வெளிப்படுத்த வேண்டிய தேர்தல் இதுவல்ல.....

வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசை வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ சார்பில் மேற்கொள்ளவிருந்த இயக்கங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் நம்மை சந்தித்து வாழ்வாதார கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றுவேன், நான் செய்யாமல் யார் செய்வார்கள், நான் தான் செய்வேன் என உறுதியளித்ததின் பேரில் நாம் மேற்கொள்ளவிருந்த போராட்டங்களை ஒத்தி வைத்தோம், இதற்கான காரணத்தை மாநிலம் முழுவதும் பேச்சு வார்த்தை விளக்க கூட்டம் நடத்தி ஊழியர்கள் மத்தியில் கொண்டு போய் சேர்க்க வேண்டுமென திருச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு தீர்மானித்தது, இதன் பின்னனியில் இக்கட்டுரை...

**கோரிக்கை நிறைவேறாததும், பணியின் தன்மையும்;...**

தமிழகத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்திய தமிழகத்தின் ஆட்சி மாற்றம் மூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாழ்வாதார கோரிக்கைகளான பழைய பென்ஷன் திட்டம், சத்துணவு஼ அங்கன்வாடி, ஊர்புற நூலகர்களுக்கான நியாயமான காலமுறையுடன் கூடிய ஒய்வ+தியம் மற்றும் சாலை பணியாளர்களுக்கு 41 மாத பணிநீக்க காலத்தை தகுதியான பணிக்காலமாக அறிவித்தல் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றாதது ஆட்சியின் மீதான அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதையும் ஊழியர்கள் கடும் கோபத்தில் இருப்பதையும் மாநிலமையம் உணராமலில்லை.

கோரிக்கைகள் நிறைவேறாமல் போனது ஒருபுறம் இருந்தாலும் அனைத்து துறைகளிலும் ஊழியர் கூட்டமைப்பு போதுமானதாக இல்லாத நிலையிலும் 4.5 லட்சம் காலிபணியிடங்கள் பூர்த்தி செய்யாத நிலையிலும் அல்லது புதியதாக தோற்றுவித்த திட்டங்களுக்கு ஊழியர் கட்டமைப்பை ஏற்படுத்தாமலும் தமிழக அரசு பொறுப்பேற்று பல்வேறு புதிய திட்டங்களாக உங்கள் தொகுதியில் முதலமைச்சர், ஊராட்சி மணி, மக்களை தேடி மருத்துவம், காலை சிற்றுண்டி திட்டம், முதல்வரின் கிராம சாலைகள் திட்டம், உங்களை தேடி உங்கள் ஊரில், கலைஞரின் மகளீர் உரிமை தொகை இப்படி எண்ணற்ற திட்டங்கள் தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது. தமிழக அரசின் நோக்கம் மக்களுக்கானவை என்கின்ற உயரிய சிந்தனையை நாம் வரவேற்கின்றோம். ஆனால் காலிப்பணியிடங்களை கணக்கில் கொள்ளாமல் போதிய கால அவகாசமின்றி உடனடியாக பணியை முடிக்க வேண்டும் என்கின்ற நிர்பந்தம் செய்வது ஊழியர்களிடையே பெரும் மனஉலைச்சலை ஏற்படுத்துகின்றது.

அனைத்து அரசு துறைகளிலும் புதியதாக கொண்டுவந்த திட்டங்களுக்கு போதிய ஊழியர் கட்டமைப்பை ஏற்படுத்தாமல் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப புதிய புதிய நடைமுறையை பணியில் புகுத்தி மூன்று

வண்ணங்களில் பணி நிலையை பிரித்து ஊழியர்களுக்கு தினந்தோறும் காணொளி மூலம் ஆய்வு என்ற பெயரில் நெருக்கடி கொடுப்பதின் மூலம் பல ஊழியர்கள் தற்கொலைக்கு செல்லக்கூடிய நிலையும் சொல்லிமாளாது... மாறாக ஆசிரியர்களையும் விட்டு வைக்காமல் மாணவர்களை மொட்டு, மலர், அரும்பு எனபிரித்தும் வருகை மற்றும் பிற விவரங்கள் Online ஏற்றும் நடைமுறையும் அதே போன்று சத்துணவு ஊழியர்களையும் மையத்தில் ஊழியர்கள் சமைக்க தயார் நிலையில், சமையல் முடிவுற்ற நிலை அடுத்ததாக சாப்பாடு பரிமாறும் நிலை என இப்படி எந்த ஒரு துறையையும் Online என்கின்ற ஆக்டோபஸ் பெறும் மன உலைச்சலை ஏற்படுத்தியிருப்பதை ஊழியர்கள் மட்டுமல்ல மாநில மையமும் மறைக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை, மறக்கவும் இல்லை என்பதை ஊழியர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

### 10 ஆண்டுகால மத்திய அரசின் வேதனை

பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சி, இந்திய சுதந்திரத்தைக் கேள்விக்குள்ளாக்கி உள்ளது, ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே தேர்தல் என்னும் பாதையில் பயணித்து மக்கள் ஒற்றுமைக்கு ஊறு விளைவித்து வருகிறது. குறிப்பாக இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் இதர மதவழி சிறுபான்மையினரை திருத்தப்பட்ட இந்திய குடியுரிமைச்சட்டம் மூலமாக நாட்டை விட்டே வெளியேற்றத்துடிப்பதும், பாரதிய ஜனதா கட்சி ஆளுகின்ற மாநிலங்களை தவிர எதிர்கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களில் சுயாட்சி, கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக ஆளுநர்கள் மூலம் மாநில அரசுகளை மற்றும் ED, IT துறை மூலம் ரெய்டு நடத்தி அச்சுறுத்துகின்றது பா.ஜ.க. அரசு. பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு விற்று தனியார்மயம், தாராளமயம், உலகமயம் போன்ற மக்கள் விரோதக் கொள்கைகளால் ஆட்குறைப்பு, வேலையின்மை பெருகி வருகிறது. தொழிலாளர் நல சட்டங்களை சுறுக்கி தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது சரக்கு மற்றும் சேவை வரி உயர்வின் மூலம் சிறு தொழில்கள் அழிந்து வருகின்றன. செல்வந்தர்களுக்கு சொத்து வரி விதிக்க மறுத்து வருவதோடு 33 % வரியை 22 % மாக குறைத்து இலாப வேட்டைக்கு வித்திடுகிறது. வரி செலுத்தும் 76% மக்கள் வறுமையில் வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பத்தாண்டு காலத்தில் 25 லட்சம் கோடி ரூபாயை கார்ப்பரேட் நிறுவனங்களுக்குக் கடன் தள்ளுபடி செய்துள்ளது. விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்யாமலும் விவசாயத்தையே கார்ப்பரேட் வசம் வழங்க வேளாண் சட்டங்களை திருத்தியது. 715 விவசாயிகள் உயிர்தியாகம் செய்து ஒரு வருடத்திற்கு மேலான தொடர் போராட்டத்தை நடத்தியதால் விவசாயம் பாதுகாக்கப்பட்டுள்ளது. நாட்டை பாதுகாக்கும் பணியிலும் “அக்னிபத்” தனியார் மயத்தை புகுத்தியிருப்பதும் நாட்டின் பாதுகாப்பு கேள்விகுறியாக்கியுள்ளது பாரதிய ஜனதா கட்சியர் ஆட்சி.

### சுவர் இருந்தால் தான் சித்திரம்...

இந்திய ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், இந்தியாவின் பன்மைத்துவத்தைப் பாதுகாக்கவும், இந்தியாவின் சுதந்திரம் மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவும் இந்த நாடாளுமன்றத் தேர்தல் போரில் முதலாவதாக நாம் இந்திய தேசத்தை காப்பாற்றும் பணியை மேற்கொள்ள வேண்டியதாகவுள்ளது, இரண்டாவதாக நமது வாழ்வாதார கோரிக்கை பற்றி யோசிப்போம். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும் எனவே இந்த பாராளுமன்ற தேர்தலில் யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதை காட்டிலும் யார் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்ற சிந்தனையுடன் வாக்களித்து ஜனநாயக கடமையாற்றுவோம். ●

# "எட்டேகால் லட்சணமே... எமனேறும் பரியே..."

தெ. வாசுகி

ஔவையார் சங்ககால பெண்பாற்புலவர்களுள் ஒருவராக திகழ்ந்தவர். ஔவையார் எனும் பெயரில் பல புலவர்கள் வாழந்து வந்தனர். கடைச்சங்கத்தில் வாழ்ந்த ஔவையார், சமய காலத்தில் வாழ்ந்த ஔவையார். கம்பர், ஒட்டக்கூத்தர் காலத்தில் வாழ்ந்த ஔவையார். அதன்பின்னர் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் முதலான அறநூல்களை அள்ளி வழங்கிய ஔவையார் என பல ஔவையார்கள் இருந்துள்ளனர். அதியமானின் வீரத்தையும், கொடையையும் பொருளாகக் கொண்டு பாடியதால் ஔவையார் என்ற பெயர் புகழ் பெறுவதற்கு காரணமாக அமைந்தது. ஔவையார் கல்வியில், அறிவில், புத்திகூர்மையில், சிறந்த பெண் ஆளுமையாக இருந்துள்ளார்.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக கம்பர் காலத்தில் வாழ்ந்த ஔவையாருக்கும் கம்பருக்கும் நிகழ்ந்த சுவையான இலக்கிய சண்டைகளை கூறலாம். கம்பராமயணத்தை படைத்து பெரும் புலவராக திகழ்ந்தவர். கம்பர் இதனால் செருக்கின் மிகுதியால் இருந்த கம்பரை தனது புலமையினால் புத்தி சாதுர்யத்தால் அடக்கிய பெருமை ஔவையாருக்கு உண்டு.

ஒருநாள் ஔவையார் சோழ நாட்டின் அம்பர் என்றொரு கிராமத்தில் ஒரு தெரு வழியாக சென்று கொண்டிருந்தபோது களைப்பின் மிகுதியால் இளைப்பாறுவதற்காக சிலம்பி என்ற தாசிகுலப் பெண்வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். தன்வீட்டுத் திண்ணையில் மூதாட்டி ஒருவர் களைப்பாக அமர்ந்திருந்ததை கண்ட சிலம்பி தான் பருக வைத்திருந்த கூழை எடுத்துவந்து ஔவையாருக்கு கொடுத்தாள். கூழை அருந்திய ஔவையார் சிலம்பியின் வீட்டுச் சுவற்றினிலே கரியினால் அரைகுறையாக எழுதப்பட்ட வெண்பாவை பற்றி வினவினாள். அக்காலத்தில் புகழ்பெற்ற புலவர்களால் பாடப்பெறுவது மிகவும் கௌரவத்திற்குரியதாக கருதினார்கள். அதனால் தான் சிலம்பிக்கும் சோழ நாட்டின் பெரும்புலவர் கம்பர் தன்னைப்பற்றி புகழ்ந்து பாடவேண்டுமென்று பேராவல் கொண்டு கேட்க அவரோ 1000 பொன் வேண்டும் என்று கூற சிலம்பி தன்னிடமிருந்த 500 பொன்னையும் கம்பரிடத்தில் கொடுத்து பாட்டு கேட்க அவரோ "தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே

மண்ணாவதும் சோழ மண்டலமே" என்று அரை வெண்பா மட்டுமே பாடிவிட்டு மீதி 500 பொன் கொடுத்தால்தான் முழுமையாக பாடுவேன் என்று கூறியதாக சிலம்பி ஔவையிடம் கூறி அழ 500 வராகன் கொடுத்தால்தான் மீதி வெண்பாவை பாடுவேன் என்ற கம்பரின் ஆணவத்திற்கு பாடம்புகட்ட நினைத்து ஔவை தனக்கு சிலம்பி அன்பாக அளித்த கூழுக்காக மீதி பாடலை பாடினாள்.

"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே மண்ணாவதும் சோழ மண்டலமே - பெண்ணாவாள் அம்பொற்சிலம்பி

அரவிந்தத்தாளணியும் செம்பொற்சிலம்பே சிலம்பு." தண்ணீரில் சிறப்புக்குரியது காவிரிநீர், அரசர்களில் சிறந்தவன் சோழன் இதைபோலவே சிலம்பில் சிறந்தது சிலம்பி எனும் நல்லாள் காலில் அணிந்துள்ள சிலம்பு என பொருள் பட பாடினாள். வருத்தமுற்று வறுமையில் வாடிக்கிடந்த சிலம்பி ஔவையின் சொல்வாக்கால் தன்காலில் பொற்சிலம்பு அணியும் வண்ணம் செல்வாக்கானாள். இவற்றை கேள்விப்பட்ட கம்பர் "கூழுக்குப்பாடி குடிகெடுத்தாள் பாவி" என்று ஔவையார் மீது கோபமுற்றதாகவும், பின்னர் ஒரு நாள் ஔவையார் அரசவைக்கு வருகை தந்தபோது கம்பர் அவரை அவமானப்படுத்தும் நோக்கில் இருபொருள்படும்படி "ஒரு காலடீ, நாலிலைப் பந்தலடீ" என்ற புதிரை இரண்டுமுறை "டீ" என்று கூறுவது போல பாடினார். இதற்கு தக்க பதிலடியாக தமிழுக்கே உரிய சிறப்புடன் செருக்குடன் கம்பரை பார்த்து

"எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே

மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்

கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே,

ஆரையடா சொன்னாயடா" என்று இரண்டு "டா" வரும்படி கம்பரின் விடுகதைக்கு பதில் கூறுகிறாள்.

தமிழில் அ என்பது எண் 8 ஐ குறிக்கும் வ என்பது 1/4 ஐ குறிக்கும். இரண்டையும் சேர்த்தால் அவ என்று பொருள் வரும். எட்டேகால் லட்சணமே என்றால் அவலட்சணமே! என்று பொருள்படும். எமனேறும் பரியே என்றால் எருமையே! என்றும் மட்டில் பெரியம்மை வாகனமே என்றால் மூதேவி வாகனம் கழுதையாகும் ஆகையால் கழுதேயே! என்றும், முட்டமேல் கூரையில்லா வீடே என்றால் மேற்கூரையில்லாத குட்டிச் சுவரே! என்றும் குலராமன் தூதுவனே என்றால் ராமனின் தூதுவன் அனுமன் என்பதால் குரங்கே! என்றும் ஒருகாலில் நாலிலை பந்தல் என்பது ஆரை கீரை என்பதால் ஆரையடா சொன்னாயடா என்று தன்னை "டீ" போட்டு பேசி புதிர் போட்ட கம்பருக்கு "டா" போட்டு பதில் கூறியதுமட்டுமல்லாமல் புதிருக்கு விடையும் கூறிய ஔவையின் நுண்ணிய அறிவுத்திறன் போற்றுதலுக்குரியது, பாலின சமத்துவமற்ற அந்தகாலத்திலும் ஆணுக்கு நிகரான புலமைபெற்றவர்கள் பெண்கள் என்பதற்கு ஔவையார் ஒரு சிறந்த உதாரணம்.

அவரைப்போல நாமும் கல்வித் திறனுடனும் புத்தி சாதுர்யத்துடனும் தவறுகளை தட்டிக்கேட்பதில் எதற்கும் அஞ்சாத துணிவுடன் திகழ்வோம். ●

## "பஞ்ச்"

மொரப்பா



**"ஏப்ரல் 1 ல் ஏமாந்தால் அன்று ஒரு நாள் மட்டுமே முட்டாள்"**

**"ஏப்ரல் 19ல் ஏமாந்தால் 5 வருடத்திற்கு முட்டாள்"**

பேச்சு

# நல்லதோர் வீணை செய்வோம்!

**(தோழர் A.சேகர் தர்மபுரி மாவட்ட முன்னாள் செயலாளர் அவர்களின் பணிநிறைவு பாராட்டுவிழா கருத்தரங்கில் மாநிலத் தலைவர் மு.அன்பரசு அவர்கள் ஆற்றிய உரை)**

தோழமைசால் சொந்தங்களே!

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

நல்லதோர் வீணை செய்வோம். இது எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பு. தொழிற்சங்கவாதியான எனக்கு இந்த தலைப்பை பார்த்ததும் ஞாபகத்திற்கு வந்தது உலகமெங்கிலும் உழைப்பு சுரண்டலுக்கு ஆளாகி இருக்கும் உழைக்கும் வர்க்கத்தின் நிலைதான். அவர்கள் மேலெழுந்து வராமல், வரவிடாமல் முதலாளிகள் கூட்டம் அவர்களின் குரல்வளைகளை இறுக்கி வருகின்றன. அவர்களை வாழவும் விடாமல் சாகவும் விடாமல் மட்டுமல்ல வேறு ஏதும் சிந்தனைகள் தோன்றாதவாறு அதிகாரச் சட்டங்களும் கார்ப்பரேட் திட்டங்களும் கயிறு போட்டு கட்டியுள்ளன. அவர்களும், தங்களுக்கு அரியணையில் இடம் வேண்டுமென்று கேட்கவில்லை. வரலாற்றில் இடம் ஏன் கொடுக்கவில்லை என்றும் வருத்தப்படவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் உழைப்புக்கு ஏற்ற ஊதியம். சட்டம் வகுத்து வைத்துள்ளபடி வேலைநேரம். நிம்மதியான வாழ்க்கை. அந்த காலம் தொட்டு இன்றுவரை இவை எதுவும் அவர்களுக்கு மொத்தமாக் கிடைத்ததில்லை.

வரலாறு நெடுகிலும் உழைக்கும் மக்களின் உழைப்பு வெளியே தெரியாதவாறு பலாத்காரமாக திருடப்பட்டே வந்திருக்கிறது இதை புரிந்துகொள்ள கொஞ்சம் வரலாற்றுக்குள் செல்ல வெந்டியதுஅ அவசியமானதாகும்.

தாஜ்மஹாலை கட்டியவர் ஷாஜஹான். அவர் அதை எப்படி கட்டினார்? ஒரு நாள் காலை எழுந்து பெரிய காகிதத்தை மேசையின் மீது பரப்பி தாஜ்மஹாலுக்காண வரைபடத்தை உருவாக்கினாரா?. இங்கே தோட்டம் வரவேண்டும்; இங்கே குவிமாடம் வரவேண்டும்; இங்கே தூண்கள், இங்கே கூரை என்று வரைந்தாரா? வரைந்து முடிந்தபின் வெள்ளை சலவைக்கல் எங்கே கிடைக்கும் என்று சுற்றித் திரிந்தாரா? கிடைத்ததும் கல்லை வெட்டி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த பாறைகளை தூக்கி குதிரை வண்டியில் போட்டுக்கொண்டு ஹேய் ஹேய் என்று சாட்டையை சுழற்றிய படி வண்டியை ஓட்டிக்கொண்டு வீடு வந்தாரா? ஏக்கர் கணக்கில் விரிந்திருக்கும் நிலத்தை இரவுபகலாக சுத்தம் செய்தாரா? நான்கு மினார் கோபுரங்களையும் அவரே தூக்கி நிறுத்தினாரா?

உலகம் வியக்கும் அலெக்சாண்டர் ஒரு மாவீரர் தான். ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அவர் போர்க்களங்களுக்கு தனியாகவா போனார்? அவருடைய வாளை கூர்மைப்படுத்தி கொடுத்தது யாராம்? அவருடைய குதிரைக்கு கொள்ளும் தண்ணீரும் வைத்தது யாராம்? எத்தனை நாள் போர் நடக்கும் என்று கணக்குப் போட்டு அதற்கேற்றார்போல் கட்டு சாதம் கட்டிக்கொண்டு அவரே சுமந்து கொண்டு போனாரா?

எகிப்திய மம்மிகள் பற்றி நாம் அறிவோம் அவற்றை உருவாக்கும் பணியில் யாரெல்லாம் ஈடுபட்டார்கள் என்று உங்களுக்கு தெரியுமா? ஒரு அரசரின் உடலை பதப்படுத்த எத்தனை பேர் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டியிருந்தது? குழிகள் வெட்ட எவ்வளவு பேர் தேவைப்பட்டார்கள்? அரசரின் உடலோடு அவர் பயன்படுத்திய பொருட்களையும் யார் குழிக்குள் இறங்கியது? சிலநேரம் அரசரோடு அவருடைய பணியாளர்களையும் சேர்த்து உயிரோடு புதைத்திருக்கிறார்கள் அவர்கள் யார் என்று யாருக்காவது தெரியுமா?

கோகினூர் வைரம் என்றால் நம் கண்கள் மின்னும். அதையும் இன்னபிற வைரங்களையும் யார் வெட்டி எடுத்தது? சுரங்கத்திற்கு கீழே

மெல்லிய வெளிச்சத்தில் உடல் எல்லாம் கறியோடு யார் இரவு பகலாக உழைத்தார்கள்? அவர்களுடைய எண்ணிக்கை என்ன? எத்தனை பேர் மூச்சு விட முடியாமல் சுருண்டு விழுந்தார்கள்? எத்தனை பேருடைய மண்டையோடுகளும், எலும்புகூடுகளும் ஒன்றோடு ஒன்று கலந்து இருக்கின்றன என்று தெரியுமா?

சீனப்பெருஞ்சுவர் தெரியும் அதை கட்டி முடிக்க எத்தனை பேர் இரத்தம் சிந்த வேண்டி இருந்தது?

தஞ்சாவூர் பெரிய கோயிலை ராஜராஜசோழன் கட்டினார். அப்படியானால் ஆட்சியை நடத்தியது யார்?

அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையை யார் கட்டியது?

பண்டைய ரோமானிய மாளிகைகளை யார் உருவாக்கியது?

பைசா கோபுரத்தை கட்டியெழுப்பியவர்கள் எவ்வளவு பேர்?

பானிபட் போர், பாரிஸ் போர், உலகப் போர் என்று பல போர்களை ஆண்டுகளோடு சேர்த்து நினைவில் வைத்திருக்கிறோம் எந்தெந்த நாடுகள் வென்றன; எந்தெந்த நாடுகள் தோற்றன என்றும் நம்மால் சொல்ல முடியும்; ஆனால் நாடுகள் எப்போதாவது போரிட்டிருக்கின்றனவா? எந்த நாடாவது இதுவரை துப்பாக்கி தூக்கி இருக்கிறதா? பீரங்கி வெடித்து இருக்கிறதா? போர் விமானம் ஓட்டி இருக்கிறதா? அப்படியானால் இவற்றையெல்லாம் செய்தவர்கள் யார் அவர்களை நமக்குத் தெரியுமா?

இந்த கேள்விகளுக்கு நம்மிடம் விடை இருக்காது அந்தப் பெயர்கள் எதுவும் வரலாற்றுப் புத்தகங்களில் இடம் பெற்றிருக்காது

அந்தப் பெயர்களை நீங்கள் தாஜ்மஹாலில், சீன பெருஞ்சுவரில், பைசா கோபுரத்தில், தஞ்சை கோயிலில் பார்க்க முடியாது!

அலெக்சாண்டரும், ஷாஜகானும், ராஜராஜனும் தான் அழுத்தந் திருத்தமாக வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரை அவர்கள் தான் அனைத்தையும் உருவாக்கினார்கள்; அவர்கள்தான் போரிட்டார்கள்; அவர்கள்தான் வரலாற்றை உருவாக்கினார்கள்' அவர்கள்தான் நினைக்கப்பட வேண்டியவர்கள்; கொண்டாடப்பட வேண்டியவர்கள்!

அப்படியானால் ஷாஜகானின் குதிரைகளுக்கு உணவளித்தது, தாஜ் மஹாலுக்காக சலவைக்கற்களை சுமந்தது, நெப்போலியனுக்கு உணவு சமைத்தது, கிளியோபாட்ராவுக்கு அலங்காரம் செய்தது, போர்க்காலங்களில் தங்களுக்கு முன்பின் அறிமுகமில்லாத வர்களுக்கு எதிராக வாட்களை வீசியதும், துப்பாக்கிகளை ஏந்தியதும், உயிரை ஈந்ததும், வைரத்தை வெட்டி எடுத்துக் கொடுத்துவிட்டு தங்கள் குடிசைகளுக்கு நடந்து சென்றதும், மாளிகைகளை கட்டிக் கொடுத்துவிட்டு வீதி ஓரங்களில் படுத்துத் தூங்கியதும் யார்?

இவர்களின் தொழிற்பெயர்கள் சிப்பாய்களாக சமையல்காரர்களாக, உழைப்பாளர்களாக, தொழிலாளர்களாக காவல்காரர்களாக பல்வேறு பெயர்களில் இருக்கலாம். ஆனால் இவர்கள் எல்லா காலங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள்; எல்லோருக்காகவும் உழைத்திருக்கிரார்கள்; எல்லோருக்காகவும் மடிந்திருக்கிறார்கள். இவர்களுக்கு முகம் இல்லை; அடையாளம் இல்லை; பெயரில்லை; வரலாற்றில் இடமும் இல்லை. யாரோ சிலருக்காக எழுதப்பட்ட வரலாற்றில் இவர்கள் அனைவரின் பெயரும் மறைக்கப்பட்டது மட்டுமல்ல குப்பையில் தூக்கி வீசப்பட்டிருக்கிறது. இவர்கள் ஒவ்வொருவரும் நல்லதோர் வீணையின் நரம்புகள். ஆனால் இவர்களுக்கு தரப்பட வேண்டிய கௌவரமும் மரியாதையும் தரப்படாமல் அவர்களும் அவர்களுடைய உழைப்பும் புழுதியில் எறியப்பட்டுள்ளது. .

இவ்வாறு வரலாறு நெடுகிலும் உழைக்கும் மக்களின் உழைப்பு வெளியே தெரியாதவாறு பலாத்காரமாக திருடப்பட்டு வந்திருக்கிறது

அந்தத் திருட்டு சட்டபூர்வமாக்கப்பட்டபோது வர்க்கங்கள் தோன்றின. சுரண்டும் வர்க்கங்கள் அடக்குமுறையை கையிலெடுத்துக் கொண்டன. சுரண்டப்பட்ட வர்க்கங்கள் அதை வேறு

வழியின்றி ஏற்றுக் கொண்டன. இதன்மூலம் சுரண்டுகிறவர்கள் கொடுப்பவர்களாகவும் சுரண்டப்படுகிறார்கள் கையேந்தி பெற்றுக்கொள்பவர்களாகவும் ஆனார்கள்.

உழைப்பு நவீனமயத்தை நோக்கி நர்கர்ந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் பல்கிப் பெருகிய போது அதற்கேற்ற ஒரு நவீன நிர்வாகமும் தேவைப்பட்டத்து. அது படிப்பாளி நடுத்தர வர்க்கமாக கண்டெடுக்கப் பட்டது. இது உழைப்பின் பலனை மடைமாற்றி சுரண்டும் கூட்டங்களிடம் சந்தடியின்றி கொண்டுபோய் சேர்த்தது இதன்காரணமாக படித்த நடுத்தர வர்க்கம் சாதாரண மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டு பல்வேறு போராட்டங்களுக்கு இடையே தவித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களில் கணிசமானவர்கள் அரசு ஊழியர்கள் என்று அறியப்படும் நாம் தான்.

ஆண்டுதோறும் மக்களிடமிருந்து திரட்டப்படும் செல்வத்தை கொண்டு ஊதியம் பெறும் அரசு ஊழியர்கலாகிய நாம் உண்மையில் மக்களுக்காகதான் பணி செய்கிறோம். அரசின் திட்டங்களை அனைத்து மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் உறுதியாக உள்ளோம். ஆனால் பெரும்பாலான மக்கள் நம்மை அப்படி பார்ப்பதில்லை. அதனால் பொதுமக்கள் அவர்களுடைய வாழ்வைப் பறிக்கும் அரசு நிர்வாகத்துடனேயே அரசு ஊழியர்களும் இணைந்து பார்க்கப்படுகிறார்கள். சுரண்டுகிற வர்க்கங்களின் கைகளில் வழுவாமல் இருந்துகொண்டு இந்த நிர்வாக அமைப்பு அவர்களையே வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் அறியாது இருக்கிறார்கள் அதை அறிவதற்கு அளவற்ற பயிற்சியும் அனுபவமும் வர்க்க உணர்வும் வளர்ந்திருக்க வேண்டும் இவை எல்லாம் போதாத காரணத்தினால் அரசு ஊழியர்களின் நன்மைக்காக இயங்கும் நிர்வாகம் என்று அரசை மக்கள் நினைக்கிறார்கள் தங்களுக்கு நன்மைகள் கிடைக்காத போது அரசில் பணிபுரியும் அதிகாரிகள் தான் அதற்கு காரணம் என்ற தப்பான முடிவுக்கு வந்து விடுகிறார்கள்.

சில அரசியல் கட்ட்சிகள் தங்கள் அரசியல் சுயலாபத்திற்காக மத மோதல்களை விசிறி விடுவது, இன மோதலகளை கிளறி விடுவது, மொழிவெறியை தூண்டி விடுவது போன்றவற்றை எளிதாகச் செய்கின்றன. நதி நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் கூட இரண்டுக்கும் குறையாத மாநிலங்களின் மக்கள் மோத விடப்படுகிறார்கள், வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது, வேலைக்கு இருந்தவர்கள் வீதிக்கு விரட்டப்படுகிறார்கள். ஒரு நிவாரண பொருளை வாங்கவேண்டும் என்றால் கூட மிதிபட்டு சாக வேண்டியிருக்கிறது. சுதந்திர இந்தியாவின் நாட்டில் செல்வம் அனைத்து மக்களுக்கும் உரிய அளவில் பங்கிடப்பட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்க வேண்டிய அவசியமே இல்லை

நாடு வெள்ளைக்காரனிடம் இருந்து அரசியல் விடுதலை அடையும் போது அன்று அடிமை இந்தியாவில் ஏழு ஏகபோக முதலாளி குடும்பங்கள் இருந்தன ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் அவை எழுவதை தாண்டின 1990களில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் ஏழு முதலாளிகளை 700 முதலாளிகள் ஆக்கிவிட்டன ஒரு காலத்தில் முதலாளிகளின் பிரதிநிதியாக பாராளுமன்றத்திற்கு சட்ட மன்றங்களுக்கும் அரசியல்வாதிகள் போய்க்கொண்டு நிலைமை போய் முதலாளிகளே அரசியல்வாதிகளாகவும் நேரடியாக நாடாளுமன்றத்தில் அமர்ந்து சட்டம் இயற்றுகிற நிலை ஏற்பட்டுவிட்டது

முதலாளிகளே அரசியல்வாதிகளாகவும் நேரடியாக நாடாளுமன்றத்தில் அமர்ந்து சட்டம் இயற்றுகிற நிலை ஏற்பட்டுவிட்டதால் கீழ் மட்டத்தில் காலங்காலமாக போராடி உருவாக்கிய ஊதிய கட்டமைப்பு சிதைந்து வருகிறது. ஊதிய விகிதங்களுக்கு பதிலாக மொத்த ஊதியம் என்ற கொள்கை பரவலாகி, அதுவும் மாறி அவுட்சோர்சிங் முறையில் வேலைகள் வாங்கப்படுகின்றன. தொழிலாளி வர்க்கம் தன் அடையாளத்தை வேகமாக இழந்து வருகிறது. முறைசாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது அணி திரட்டப்பட்ட தொழிலாளர் வர்க்கச்

செயல்பாடுகள் தேய்ந்து வருகின்றன

கல்வி கொடுப்பது அரசின் கடமை என்பது அடியோடு மறந்து போய் அது வியாபாரமாகிவிட்டது. மருத்துவம் பார்ப்பது அரசின் பொறுப்பு அல்ல என்றாகிவிட்டது. அரசு மருத்துவமனைக்குப் போனால் புண்ணியம் இல்லை என்ற கருத்து வேரூன்றப் பட்டுவிட்டது. தனியார் மருத்துவமனைகள் கொழிக்கின்றன. இவ்வாறாக எல்லாமும் தலைகீழாக மாறி வருகின்றன இவை பொருளாதாரத்தில், பொருளாதார ரீதியாக சமூகத்தில் பல்வேறு பின்விளைவுகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன.

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு அணிதிரட்டப்பட்ட தொழிலாளி வர்க்கம் உறுதிமிக்க போராட்டங்களில் ஈடுபடுவது மட்டுமே. கடந்த காலங்களில் யாரெல்லாம் போராடினார்களோ அவர்கள் எல்லாம் வாழ்க்கையில் ஓரளவுக்கு முன்னேறினார்கள். போராடாதவர்கள் முன்னேறாமல் பின் தங்கினார்கள். பின் தங்கியவர்கள் இப்போது இருக்கும் உரிமைகளை ஒவ்வொன்றாக இழக்கும் நிலைக்கு தள்ளப் பட்டிருக்கிறார்கள். உழைக்கும் வர்க்கத்தின் ஒரு பிரிவாக அரசு ஊழியர்களாகிய நாமும் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. அவர்களை தாங்கிப்பிடிப்பது நம் கடமை. அவர்களை தாங்கிப் பிடிப்பது என்பது நம்மை நாமே தாங்கிப் பிடிப்பதாகும். கரத்தால் உழைக்கும் மக்களின் உரிமைகளும் கருத்தால் எழுத்தால் அரசு திட்டங்களால் பணி செய்யும் அரசு ஊழியர்களின் உரிமைகளும் வேறு வேறல்ல. எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமதர்ம வீணையை கரத்தாலும் கருத்தாலும் உழைக்கும் அனைவரும் செய்வோம். அதில் பொது உடைமைக் கொள்கை என்ற நரம்பிழைகளை முறுக்கி, நல்ல நல்ல பாடல்கள் இசைப்போம்.

கடலில் இருந்து வீசும் காற்றும் மரத்தில் விளையும் பழங்களும் எல்லோருக்கும் பொதுவானது என்கிற நிலையை இந்த சமுதாயத்தில் உருவாக்க நல்லதோர் வீணை செய்வோம் அதில் எல்லோரும் மகிழும் இசையை கேட்போம். ●

கவிதை

## நேர்வது தேர்தலில் மாற்றம் தந்து

### பெரணமல்லூர் சேகரன்

தேர்தல் பத்திரம் என்ற பெயரில்
நேர்மை யின்றிக் குவித்த பணம்
வாய்மை யில்லா ஆள்வோர் குணம்
தூய்மை என்று பேசும் தினம்

முறைகே டென்று உச்சநீதி மன்றம்
நிறைவாக உமிழ்ந்தது மக்கள் மன்றம்
திரைமறைவில் குதிரை பேரந் தமக்கு
கரைபடிந்த ஆட்சியர்க்கு ஆனது வசதிக்கு

வந்தது கோபம் விஸ்வ குருவிற்கு
தந்தது உபதேசம் சகட்டு மேனிக்கு

கிருஷ்ணன் தமக்குக் குசேல முதலாளிகள்
கனிவாய் வழங்கிய அவலைக் கொண்டு
கெடுவாய்ப் பென்று தீர்ப்பான தென்று
கொடிய வார்த்தைகள் விழுந்தன இன்று

இதுவரை எந்த தலைமை அமைச்சரும்
இதுமாதிரி நீதித் தலைமையைத் தாக்கிய
வரலாறு படைத்த தில்லை அறிவோம்
திரளாக எதிர்க்க வேண்டும் தெரிவோம்

வந்தது காலம் எளியோர்க்கு இப்போது
தந்தது பாடம் பத்தாண்டு தப்பாது
நொந்தது எல்லாம் ஒன்று சேர்ந்து
நேர்வது தேர்தலில் மாற்றம் தந்து ●

# இனி அரசு ஊழியர் சங்கத்தினைஅர்ப்பணிப்பு உணர்வோடும், ஆளுமை திறத்தோடும் வழி நடத்துவார்கள் பெண்கள்!

**(தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 9.3.2024ஆம் தேதி நடத்திய மாநில மகளிர் சிறப்பு மாநாட்டில் மாநில தலைவர் திரு மு.அன்பரசு அவர்கள் ஆற்றிய துவக்கவுரை)**

நதிகளைப்போல் இல்லங்களில் இருந்து நகர்ந்து வந்து ஆர்ப்பரிக்கும் கடலைப்போல் இம்மன்றத்தில் வீற்றிக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஐம்புலன்களே,

இந்த மாநாடு மறக்க முடியாத மாநாடாக சிறக்க இறக்கை கட்டி உழைத்திருக்கும் வட சென்னை, தென் சென்னை மாவட்டத்தின் நிர்வாகிகளே உறுப்பினர்களே

உங்கள் அனைவருக்கும் நமது சங்கத்தின் மாணிக்க ஆண்டில் நடக்கும் இம்மாபெரும் மகளிர் மாநில சிறப்பு மாநாட்டின் வாயிலாக வாழ்துக்களையும் தெரிவித்துகொள்கிறேன்.

நம்மைவிட பல பெரிய தொழிற்சங்கங்கள் இருந்தாலும் அமைப்பு விதிகளில் துணிச்சலாக மாற்றங்களை செய்வதில் நமக்கு நிகர் நாமாகத்தான் இருக்கிறோம்.

எந்த தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் அதன் மகளிர் உறுப்பினர்களுக்கு நிர்வாகத்தில் 33 சதவீதம் பெண் உறுப்பினர்கள் பங்கேற்பதனை உறுதி செய்யாத நிலையில் தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் இந்த 400ம் மாணிக்க ஆண்டின் தொடக்கத்திலேயே செய்து காட்டியிருக்கிறோம். இதோ இந்த சர்வதேச மகளிர் மாநாடு நாம் தேர்ந்தெடுத்திருக்கும் நம்முடைய மகளிர் தலைவர்களைக் கொண்டு நடத்துகிறோம்.

இந்த 33 சதவீத மகளிருக்கான இட ஒதுக்கீடு மாநில மையத்திற்கு மட்டுமல்ல மாவட்ட அளவிலும் விரிவாக்கம் செய்யப் பட வேண்டும் என்ற முடிவில் இருக்கிறோம். வரும் செப்டம்பர் அல்லது அக்டோபரில் நடைபெறக்கூடிய நமது சங்கத்தின் மாணிக்க ஆண்டு நிறைவு மாநாட்டில் அதற்கான அறிவிப்புகள் வெளியிடத் தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறோம். அதன்மூலம் இச்சங்கத்தை ஒரு மூன்றாம் தலைமுறையிடம் ஒப்படைக்கக் கூடிய பொறுப்பை இந்த தலைமை ஏற்று இருக்கிறது.

அரசு ஊழியர் சமூகத்தில் இன்று ஏராளமான பெண்கள், இளம்பெண்கள் சுமார் 60லிருந்து 700 சதவீதம் வரை இருக்கிறரர்கள். சுறுசுறுப்பானவர்களும், திறமைசாலிகளும், அறிவுசார் மங்கைகளும் இந்த சங்கத்தை சிறப்பாக வழிநடத்துவதற்கான வாய்ப்பு வாசல்கள் இதன்மூலம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை பெருமிதத்துடன் நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்படிடுக்கிறேன்.

வெறும் கோரிக்க்கைகளாலும் பிரதிநிதித்துவங்களாலும் மட்டுமே நம்முடைய உரிமைகள் கிடைத்து விடாது என்கிற நிதர்சன நிலையை அணைத்து மகளிருக்கும் உணர்த்துவதோடு மட்டுமல்ல அவர்கள் அனைவரும் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து போராட்ட களத்தில் இறங்கக் கூடிய நிலைக்கும் தங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். பெரும்பான்மை பெண்கள் நடத்துகின்ற உரிமைக்கான போராட்டங்கள் ஒருபோதும் தோற்றதாக வரலாறு இல்லை. அதற்கான துவக்கப் புள்ளி மாநாடாக இந்த மகளிர் மாநில மாநாடு இருக்கும் என்பதை உங்கள் முன்னிலையில் அறிவிக்க விழைகிறேன்.

என்னிடம் சிலபேர் கேட்கிறார்கள், மகளிர் தினத்திற்கு இவ்வளவு பெரிய மாநாடு தேவைதானா என்று. நான் அவர்களிடம் நம் நாட்டில் அதிக அளவில் பெண்கள் வேலைக்கு வருவதால், நல்ல ஆடை அணிகலன்கள் அணிவதால், நகைபூட்டி அலங்காரம் செய்துகொள்வதால் மட்டும் முன்னேற்றமும், உரிமைகளும் அடைதுவிட்டதாகக் கொள்ளமுடியாது. அவர்களின் உண்மையான சுந்தந்திரம் என்பது அவர்களுக்கான சம உரிமைகளை நாம் கொடுப்பதுதான் என்றேன்.

உலக அளவில் பெண்களின் முன்னேற்றம் எப்படி உள்ளது என்பதைப் பற்றி ஐக்-கிய நாட்டு அமைப்பின் தலைமைச் செயலாளர் அண்டோனியோ குட்டாரஸ் கூறுகிறார், ``தற்போதைய நிலையில் பெண்ணுரிமை பெருகினால் ஆண் பெண் சம-நிலை இன்னும் 300 ஆண்டுகள் தூரத்தில் இருக்கும், தற்போதே சமநிலை தூரமா-கிக் கொண்டே போவதாகவும்`` எச்சரித்துள்ளார். மேலும் பெண் உரிமைக்கு தீங்கும் அச்சுறுத்தலும் ஏற்பட்டு வரு வதாகவும் பெண்ணுரிமை மீறப்பட்டு வருதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைப்பேற்றின்போது ஏற்படும் மரணங்கள், பெண்கள் பள்ளிக்குச் செல்ல முடி-யாத நிலை, பராமரிப்பாளர்களுக்கு வேலை கிடைக்காமல் போவது, குழந்தைத் திரு-மணம் போன்றவை உலக அளவில் அதிகரித்து வருவதாக அவர் தெரிவிக்கிறார்.

தலிபான் ஆட்சியின் கீழுள்ள ஆப்கானிஸ்தானில் பெண்களும் சிறுமிகளும் பொது வாழ்விலிருந்து அழிக்கப்பட்டு விட்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

பல இடங்களில் பெண்களின் பாலியல், பிள்ளைப்பேறு சார்ந்த உரிமைகள் குறைக்-கப்பட்டு வருவதாகவும் சில நாடுகளில் பள்ளிக்குச் செல்லும் பெண்கள் கடத்தல், வன்முறை போன்ற ஆபத்துகளை எதிர்நோக்குவதாகவும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

பல நூற்றாண்டுகளாக நீடிக்கும் ஆணாதிக்கம், பாகுபாடு, கேடு விளைவிக்கும் மாறா உளவியல் படிமங்கள் ஆகியவை அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் பெரிய பாலின இடைவெளியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறுகிறார். அந்தத் துறைகளுக்கான நோபெல் பரிசுகளில் மூன்று விழுக்காடு மட்டுமே பெண்களுக்குச் செல்வதையும் திரு குட்டாரஸ் சுட்டிக்காட்டிடத் தவறவில்லை.

பெண்கள் எதிர்நோக்கும் தடைகளைக் களையும் கல்வி முறையை உருவாக்கவும் திறன் பயிற்சியை மேம்படுத்தவும் மின்னணுத் துறையில் பாலின இடைவெளியைக் குறைக்கவும் அரசாங்கங்கள், குடிமைச் சமூகம், தனியார் துறை ஆகியவை ஒரு-மித்துச் செயல்பட வேண்டும்.

வேலையிலும் சம்பளத்திலும் பெண்களின் நிலை அதிக முன்னேற்றம் அடைய-வில்லை என்றும் ஐக்கிய நாட்டு அமைப்பு கூறியுள்ளது.

உலக அளவில் பெண்கள் வேலைகளைப் பெறுவது முன்பு கருதப்பட்டதைவிட கடி-னமாக ஆகியிருக்கிறது என்றும் வேலைச் சூழல், சம்பளம் ஆகியவற்றில் ஆண்க-ளுக்கும் பெண்களுக்கும் இருக்கும் இடைவெளி கடந்த இருபது ஆண்டுகளில் கிட்டத்தட்ட எந்த முன்னேற்றமும் இல்லாமல் உள்ளது என்று ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் அனைத்துலக தொழிலாளர் அமைப்பு கூறியுள்ளது.

வேலையின்மைக்கான தற்போதைய தகுதி நிபந்தனைகள், பெண்களை அளவுக்கு அதிகமாக ஒதுக்குவதாக கண்டறியப்பட்டுள்ளது. அந்தப் புதிய அளவுகோலின்படி ஆண்களைவிட வேலை கிடைப்பதில் பெண்கள் அதிகச் சிரமத்தை எதிர்நோக்குகின்-றனர். ஆண்கள் உழைப்புக்குப் பெறும் ஒவ்வொரு டாலருக்கும் பெண்கள் உலக அளவில் 51 காசு மட்டுமே பெறுவதாக அனைத்துலக தொழிலாளர் அமைப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பெண்கள் உரிமைக்காக பல பேர் பேசியிருந்தாலும் அவர்கள் வீட்டில் பெண்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது வருத்தம் அளிக்கும் செய்தியாகய உள்ளது. “உங்கள் மனைவிக்குச் சம உரிமை கொடுக்காத நீங்கள் எப்படி நாட்டுக்கு விடுதலைப் பெற்றுத் தருவீர்கள்?” என்று கேட்டு பாரதியாரின் பெண் விடுதலைப் பாடல்களுக்கு வித்திட்டவர் சகோதரி நிவேதிதா என்ற பெண் தான். அதற்கு பிறகு தான் பாரதி பெண் விடுதலைக் கும்மி எழுதினான் என்பது வரலாறு.

இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் சாவித்திரிபாய் பூலே, தமிழகத்தின் முதல் பெண் மருத்துவரும் மிகச்சிறந்த சமூகப் போராளியுமான முத்துலட்சுமி ரெட்டி, சர்வதேச மகளிர் தினத்தை உலகம் அனுசரிக்க உழைத்த க்ளாரா ஜெட்கின், மனித நேயம் மிக்க புரட்சியாளரும் தன் எழுத்துகளின் மூலம் மாற்றத்திற்கு வித்திட்டவருமான ரோசா லக்சம்பர்க் இவர்களைப் போன்ற இன்னும் எண்ணற்ற பெண்கள், இந்த சமூகம் வளரவும் பெண்களின் வாழ்வு மலரும் உழைத்திருக்கின்றனர்.

"ஆண்கள் 8 மணிநேரம் ஆபீஸ் வேலைபார்த்தால், பெண்கள் அதுக்கு அப்புறமும் வீட்டு வேலைகள், குழந்தைகள் படிப்பு என்று 13 மணி நேரம் சராசரியாக வேலைபார்க்கிறார்கள். இந்த உழைப்புச் சுரண்டலில் இருந்தெல்லாம் அவர்களுக்கு எப்போது விடுதலை கிடைக்கும் யார் கொடுப்பார்கள்?

மாதவிடாய் விடுப்பு, பெற்றவர்களுக்கு இறுதிச் சடங்கு செய்யும் உரிமை, குழந்தை வேண்டும், வேண்டாம் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை, தனக்கு நடந்த பாலியல் வன்முறையை தன் குடும்பத்தில் வெளிப்படையாகப் பேசும் உரிமை, குடும்பத்தில் சம உரிமை, மரியாதை, தன் கேரக்டர் மற்றவர்களால் மதிப்பீடு செய்யப்படுவதிலிருந்து விடுதலை எனப் பல விஷயங்களில் பெண்களுக்கான உரிமைகள் காலம் காலமாக மறுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை அவர்களுக்கு பெற்றுத் தருவதுதான் அறிவார்ந்த ஆண் சமுதாயத்தின் பணியாக இருக்க வேண்டும், இருக்க முடியும்.

நம் நாடு 75ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையிலும், பெண் சுதந்திரமும் பெண்ணின விடுதலையும் இன்னும் கோரப்படும் விஷயங்களாகவே இருப்பது ஆகப் பெரும் வேதனை.

மேலே குறிப்பிட்ட கோபங்கள், ஏக்கங்கள், கேள்விகள், வருத்தங்கள் 90 சதவீதம் பெண்களுக்கும் உரியவைதான். அவர்களுக்கான சுதந்திரமும் விடுதலையும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களிடம் தான் கட்டுண்டு கிடக்கின்றன. அதை நம் வீட்டுக்கு, அலுவலகத்திற்கு, சமூகத்திருக்கு, நாட்டுக்கு இந்த சர்வதேச மகளிர் தினத்தில் உணர வைப்போம். இந்த மகளிர் மாநில மாநாடு அதற்கான வழிகாட்டியாக இருக்கும். ●



**“நாங்க தலித்தை ஜனாதிபதி ஆக்கினோம்”**

**“வெங்காயம், அவங்களை தலித்தாக்குனது யாருடா?”**

**- தந்தை பெரியார்**

கவிதை

# பெருமை கொள்கின்றேன்; பேருவகை அடைகின்றேன்!

– நாகை வே.சித்ரா



பூ வாசல் திறந்து..
பூவுலகை காண்பதற்குள்...
கள்ளிப் பாலேந்தி கிழவியவள்
காத்திருப்பாள்...

கள்ளிப் பாலில் தப்பித்து
தாய்ப்பாலை அருந்துகையிலேயே...
முதல் போராட்டத்தில் வெற்றி வாகை
சூடிவிட்டாள்!

பெண்மை பெற்றிடும்
பரிமாணங்கள் பலப்பல!
சந்திக்கும் அவமானங்கள்
அதனினும் பல!

தாயாய் தாரமாய் தங்கையாய்
அன்பின் அமைவிடமாய்...
மொத்தமாய் திகழ்பவள்!

உதிரம் கொடுக்கும் வலியினையே....
உதட்டின் புன்னகையால்
மறைத்திடுவாள்!

தாவணியை தந்துவிட்டு
கல்விக் கனவுக்கு தடை போடும்...
உலகறியா தந்தையிடம்...
கெஞ்சி கூத்தாடி....
பள்ளிக்கு சென்றிடுவாள்!

பத்தாம் வகுப்பிலேயே
பரிசம் போட்டுவிட...
படிக்காத மாமனவன் தட்டோடு
வந்திடுவான்!

உயர் படிப்பு படித்திடவே...
திருமணத்தை உதறி தள்ளிவிட்டு...
ஊரை எதிர்த்துக்கொண்டு

தானுயர கல்லூரிக்கு....
தாவித்தான் சென்றிடுவாள்!

வண்ண வண்ண கனவுகளுடன்...
பட்டம் பெற்றிடவே விடுதியில் தங்கி
பாங்குடனே படித்திடுவாள்!

மங்கையவள் பூங்கனவை....
மரணக்குழியில் தள்ளிடவே
மதிகெட்ட கூட்டமொன்று..
தரம் கெட்டு அலைந்திடுமே!

பெண்மையை தீண்டும்
மிருகக் கூட்டத்தை...
பார்வைக்கனல் கொண்டு
பொசிக்கிடுவாய்!

பட்டம் பலபெற்று..
சட்டம் அனுமதித்த,
சாஸ்திரம் மறுத்துரைத்த
பொறுப்புகளில் அமர்ந்து...
சாதனை மகளாய்
தரணியெங்கும் மின்னிடுவாள்!

மனம் கொண்ட மணாளனுக்காக...
தனக்கென வாழ மறந்திடுவாள்!

உலகை காணும் இன்னொரு உயிரை...
உதிரம் கொடுத்து பெற்றிடுவாள்....

தாய்ப்பால் சுரந்த நாள் முதலாய்...
தாயாய் மட்டுமே வாழ்ந்திடுவாள்!

பெற்ற பிள்ளையைக் காக்க...
பூகம்பம் வந்தாலும்...
துணிந்து நின்று எதிர்த்திடுவாள்!

ஆலமரமாய் மனவலிமை படைத்தவள்;
கடவுளிடம் இருந்து வரமாய் வந்தவள்;
உடம்பும் மனமும்
வலி கொண்டு துடித்தாலும்
கண்ணீருக்குள் மறைத்திடுவாள்!

நரை கொண்டு தரைதட்டி நடந்தாலும்
சிங்க பெண்ணாய் ஜொலித்திடுவாள்!

பிள்ளைப் பேறொன்றே
பெண்ணின் பெருமையென...

கொண்டவனை இழந்தால்
உடன்கட்டை ஏறுவதே
உனக்குப் பெருமையென...

பெண்ணை ஆகச் சிறந்த அடிமையென...
நடத்திட்ட கூட்டமொன்று...

மீண்டும் தமிழ் நிலத்தில்
தலையெடுக்க வேண்டுமென்ற தளராத
விருப்பமுடன்
முயன்று வரும் வேளையிலே....

தந்தை பெரியாரின் தடிகொண்டு...
பகுத்தறிவுப் பாதையிலே....
பொதுவுடைமை வீதியிலே....

தன்னைப் பற்றி மட்டுமே எண்ணாமல்....
தன் சமூகத்தின் நலனுக்காக ...
தன் உழைப்பை தந்திடவே....

நாளும் முந்தி வரும்
எந்தன் மதிப்புறு மகளே!
உன்னை தோழியாய் அடைந்ததற்கே...

பெருமை கொள்கிறேன்!
பேருவகை அடைகின்றேன்! ●

# இந்தியா ஒன்றுபடும்! 'இந்தியா' வெல்லும்!!

**(ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோர் மீதான கைதுநடவடிக்கையை கண்டித்து புதுதில்லியில் அனைத்து கட்சி தலைவர்கள் கலந்து கொண்ட போராட்டத்தில் முக்கியத் தலைவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம்)**

**பாஜகவின் ஊழலுக்கு எதிரான போராட்டம் : கார்கே**

"இந்த போராட்டம் ஹேமந்த் சோரன், கெஜ்ரிவால் போன்ற தனிநபர்களுக்கானது அல்ல. நாட்டையும், நாட்டு மக்களையும் காக்கவும், அரசியல் சட்டத்துக்காகவும் நடத்தப்படும் போராட்டம் ஆகும். முக்கியமாக பாஜகவின் ஊழலுக்கு எதிரான போராட்டம் ஆகும். பிரதமர் மோடிக்கு ஜனநாயகம் தேவையில்லை, அவர் சர்வாதிகாரத்தை மட்டுமே நம்புகிறார். ஒருவேளை பாஜக அரசியல் சட்டத்தை உருவாக்கியிருந்தால், பெண்களை வாக்களிக்கக் கூட அனுமதித்து இருக்க மாட்டார்கள். ஆனால் பண்டித ஜவஹர்லால் நேருவும், பாபா சாகேப் அம்பேத்கரும் வயது வந்தோருக்கான வாக்குரிமையைக் கொண்டு வந்து, பெண்ணோ ஆணோ, அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை அளித்தனர். இளைஞர்களுக்குவேலைவாய்ப்பு, பணவீக்கம் உயர்வு பிரச்சனை, விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஆகியவற்றை பெறுவதற்கான போராட்டமே 2024 மக்களவை தேர்தல் என்பதால், "இந்தியா" கூட்டணியுடன் அனைவரும் ஒற்றுமையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசினார்.

**இந்தியா ஒன்றுபடும், இந்தியா வெல்லும் : சீத்தாராம் யெச்சூரி**

"ஊழல் மற்றும் சர்வாதிகாரத்தில் இருந்து நீங்கள் விடுதலை பெற வேண்டுமானால், மதச்சார்பற்ற முன்னணியான "இந்தியா" கூட்டணியை ஆதரிக்க வேண்டும்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி பேசினார். மேலும் "ஜூடேக பாரத், ஜூதேக இந்தியா (இந்தியா ஒன்றுபடும், இந்தியா வெல்லும்)" என்ற முழக்கத்தை எழுப்பினார். யெச்சூரியுடன் "இந்தியா" கூட்டணி தலைவர்களும், தொண்டர்களும் முழக்கங்களை எழுப்ப தில்லி ராம் லீலா மைதானம் அதிர்ந்தது.

**பாசிச செயல்திட்டத்தால் எங்களை ஆள முடியாது : து. ராஜா**

"தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். பாஜகவும், ஆர்எஸ்எஸ்ஸும் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி எழுத முயற்சிக்கிறார்கள். பாசிச செயல்திட்டத்தால் நாட்டை ஒருபோதும் ஆள முடியாது. நாடு ஒரு பேரழிவை எதிர்கொள்கிறது, அதை நாம் ஒற்றுமையாக, ஒன்றாக இணைந்து காப்பாற்ற வேண்டும்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் து.ராஜா அழைப்பு விடுத்தார்.

**அறிவிக்கப்படாத அவசரநிலை : மு.க.ஸ்டாலின்**

"பாஜக விரக்தியில் தவறு செய்து வருகிறது. "இந்தியா" கூட்டணி உருவான பிறகு "இந்தியா" என்ற வார்த்தையே பாஜகவுக்கு கசப்பாக மாறியது. "இந்தியா" கூட்டணித் தலைவர்கள் அனைவரையும் இந்த நாட்டின் எதிரிகளைப் போல நடத்தத் தொடங்கியது பாஜக தலைமை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை கவிழ்ப்பது மற்றும் அமலாக்கத்துறை, சிபிஐ, வருமான வரித்துறை போன்ற மத்திய அமைப்புகளை கட்டவிழ்த்து விடுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் பாஜகவில் இணைந்தவர்கள் மீதான வழக்குகள் கைவிடப்படுகின்றன. அதாவது பாஜகவிற்கு எதிராக நிற்கத் துணிந்தவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இது அறிவிக்கப்படாத

அவசரநிலை. ஹேமந்த் சோரன், கெஜ்ரிவால் கைதுகள் பாஜகவை எதிர்த்துப் போராடுவதற்கான எங்களின் உறுதியை வலுப்படுத்துகின்றன'' என, தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினின் செய்தியைதிமுகசார்பில்திருச்சிசிவாபொதுக்கூட்டமேடையில்வாசித்தார்.

**ஜனநாயகம், அரசியலமைப்பை அழிக்க முயற்சி : சரத் பவார்**

''மோடி அரசு தில்லி முதல்வர் கெஜ்ரிவால், ஜார்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும் பல மாநிலத் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. இந்த நடவடிக்கை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் மற்றும் அரசியலமைப்பை அழிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் ஆகும். ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பை காப்பாற்றுவது நமது பொறுப்பு ஆகும். ''இந்தியா'' கூட்டணிக்கு மக்களாகிய நீங்கள் வாய்ப்பு அளித்தால், நாங்கள் ஒரு சிறந்த தேசத்தை உருவாக்குவோம்'' என தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் உறுதி அளித்தார்.

**தேர்தலில் மேட்ச் பிக்சிங் செய்ய மோடி முயற்சிக்கிறார் : ராகுல்**

''பாஜக இத்தேர்தலில் 400 எம்பிக்களுடன் நாடாளுமன்றத்தில் அமர்வோம் என்று முழங்குகிறது. இந்த முழக்கம் மேட்ச் பிக்சிங் செய்தால் மட்டுமே சாத்தியமாகும். ''மேட்ச் பிக்சிங்'' என்ற வார்த்தையை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ''மேட்ச் பிக்சிங்'' என்பது நடுவரை கைக்குள் கொண்டு வந்து, ஆட்டக்காரரை விலைக்கு வாங்கி, கேப்டனை மிரட்டி ஒரு போட்டியில் வெற்றி பெறுவது ஆகும். ஐபிஎல் போட்டிகளில் நடுவர்களுக்கு அழுத்தம் ஏற்படும்போது விளையாட்டு வீரர்கள் விலைபோகின்றனர். கேப்டன்கள் மிரட்டப்படுகிறார்கள். நம் முன்னால் இப்போது மக்களவைத் தேர்தல் உள்ளது. இதில் நடுவர்களை பிரதமர் மோடி தேர்வு செய்கிறார். நம் அணியின் இரண்டு கேப்டன்களை ஏற்கெனவே கைது செய்துள்ளனர். காங்கிரஸ் மிகப்பெரிய எதிர்க்கட்சி. ஆனால் எங்களின் அனைத்து கணக்குகளையும் தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் முடக்கியுள்ளனர். இது எந்த மாதிரியான தேர்தல் எனத் தெரியவில்லை. பிரதமர் மோடி இந்த நாட்டின் சில தொழிலதிபர்களுக்காக தேர்தல் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அரசமைப்பை ஏழைகளிடமிருந்து பறிக்கிறார். மக்களாகிய நீங்கள் முழு பலத்துடன் வாக்களிக்கவில்லை என்றால், மோடியின் மேட்ச் பிக்சிங் வெற்றி பெற்றுவிடும்; அது வெற்றி பெற்றால் அரசியலமைப்பு அழிந்து விடும்'' எனவே மிகுந்த எச்சரிக்கையுடன் மோடியை வீழ்த்த வேண்டும் என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி பேசினார்.

**எதற்கும் பயப்பட மாட்டோம் : தேஜஸ்வி**

''அமலாக்கத்துறை, சிபிஐ உள்ளிட்ட மத்திய விசாரணை அமைப்புகள் பாஜகவின் அடியாட்கள். எனது தந்தை லாலு பலமுறை மத்திய அமைப்புகளால் துன்புறுத்தப்பட்டுள்ளார். தற்போது நான், எனது தாயார், எனது சகோதரிகளும் துன்புறுத்தப்பட்டு வருகிறோம். இதற்கெல்லாம் பயப்பட மாட்டோம். சிங்கங்கள் (கெஜ்ரிவால், சோரன்) கூண்டில் அடைக்கப்பட்டுள்ளன. மேலும் பல சிங்கங்கள் வெளியே உள்ளன. இறுதி வரை போராடுவோம்'' என ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் தேஜஸ்வி கூறினார்.

**பாஜகவை விரட்டி அடிப்போம் : அகிலேஷ்**

''பாஜக 400 இடங்களை கைப்பற்றும் என்று பாஜகவினர் கொக்கரிக்கிறார்கள். உண்மையில் 400 இடங்களை வெல்லக் கூடிய அளவுக்கு மக்கள் ஆதரவு இருந்தால் அரவிந்த் கெஜ்ரிவாலையும், ஹேமந்த் சோரனையும் ஏன் கைது செய்ய வேண்டும்? நான் உங்களிடம் (மக்கள்) முறையிடுகிறேன். பாஜகவை தோற்கடித்து அவர்களை விரட்டி அடியுங்கள். உங்கள் வாக்கு மூலம் மட்டுமே இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும். உங்கள் வாக்குகளால் மட்டுமே நமது அரசியலமைப்பு, இடஒதுக்கீடு மற்றும் பிடிஏ பிரிவில் உள்ள 90% மக்களைக் காப்பாற்ற முடியும் (பி - பிச்சர் என்றால் பிற்படுத்தப்பட்டோர், டி - தலித், மற்றும் ஏ - அல்பசங்க்யாக் என்றால் சிறுபான்மையினர்). மோடிக்கு விவசாயிகளை சந்திக்க நேரமில்லை. ஆனால் பிரியங்கா சோப்ராவை சந்திக்கவோ, அக்சய் குமாருக்கு பேட்டி கொடுக்கவோ நேரமிருக்கிறது'' எனக் கூறினார்.

**கல்பனா, சுனிதா எனது சகோதரிகள் : உத்தவ் தாக்கரே**

*"இது மக்களவை தேர்தல் பிரச்சாரப் பேரணி அல்ல. எனது மற்றும் எங்களது இரு சகோதரிகளான கல்பனா (சோரன் மனைவி) மற்றும் சுனிதாவை (கெஜ்ரிவால் மனைவி) ஆதரிக்கவும், சர்வாதிகார பாஜக இரு சகோதரிகளின் கணவர்களை சிறையில் அடைத்ததால் ஒட்டுமொத்த நாடும் அவர்களுக்கு ஆதரவளிக்கிறது என்பதை அவர்களிடம் சொல்லவுமே இங்கு வந்துள்ளேன். மத்திய அமைப்புகள் பாஜகவின் பங்காளிகள். "இந்தியா" கூட்டணி எழுச்சி பெற்று ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. பாஜக ஒரு வாஷிங் மெஷின் கட்சி. ஊழல் செய்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் அக்கட்சியில் சேர்ந்த பிறகு 'சுத்தமாகி' விடுகின்றனர்" என சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே குற்றம்சாட்டினார்.*

**சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்! : கல்பனா சோரன்**

*"எங்களின் ஆதிவாசிகள் மற்றும் பழங்குடியினரின் வரலாறே ஒரு போராட்டமாகும். இன்று இந்தியாவின் 50 சதவீத பெண்கள் மற்றும் 9 சதவீத பழங்குடியினரின் குரலாக உங்கள் முன் நிற்கிறேன். பாஜகவின் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர மக்களாகிய நீங்கள் அனைவரும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்துள்ளீர்கள் என்பதற்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றுகூடல் சாட்சியாக உள்ளது" என, சிறையில் உள்ள ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரனின் மனைவி கல்பனா பேசினார்.*

**கொடுங்கோன்மை எடுபடாது : சுனிதா கெஜ்ரிவால்**

*"முதல்வர் கெஜ்ரிவால் ராஜினாமா செய்ய வேண்டும் என்று பாஜக கோருகிறது. அவர் ராஜினாமா செய்ய வேண்டுமா? அவரது கைது நியாயமா? என பல்வேறு கேள்விகள் எழுகின்றன. கொடுங்கோன்மை வேலை செய்யாது. கெஜ்ரிவால் ஒரு சிங்கம். அவரை நீண்ட காலம் சிறையில் வைக்க முடியாது" என தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் மனைவி சுனிதா பேசினார்.* ●

# கருத்தரங்கம் மற்றும் பணி நிறைவு பாராட்டு விழா

தருமபுரி மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர்.A.சேகர் அவர்களின் அரசுப்பணி நிறைவு பாராட்டு விழா. 17.03.2024 ஞாயிறு அன்று தருமபுரி, பெரியார் மன்றத்தில் 29.02.2024 அன்று 35-1/2 ஆண்டுகள் பணியாற்றி அரசுப்பணியை நிறைவு செய்த தருமபுரி மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர். A. சேகர் அவர்களின் அரசு பணி நிறைவு பாராட்டு விழா மாவட்டத் தலைவர் தோழர். M. சுருளிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் இந்திய தொழிற்சங்க மையத்தின் மாநிலத் தலைவர் தோழர். A. சவுந்திரராஜன் அவர்கள் கலந்துகொண்டு புதியதோர் உலகம் செய்வோம்" என்ற தலைப்பில் கருத்துரையாற்றி வாழ்த்தி பேசினார். TNGEA, மாநிலத் தலைவர் தோழர். மு. அன்பரசு அவர்கள் கலந்துகொண்டு "நல்லதோர் வீணை செய்வோம்" என்ற தலைப்பில் கருத்துரையாற்றி வாழ்த்தி பேசினார். இவ்விழாவில் அரூர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தோழர். P.டில்லிபாபு TNGEA, மாநில நிர்வாகிகள் மு.பாஸ்கரன் கோ.பழனியம்மாள் அண்ணா குபேரன் ந.வெங்கடேசன் மு.சீனிவாசன் தெ.வாசுகி சா.டானியல் ஜெயசிங் உ.சுமதி ச. ஹேமலதா சா.கோதண்டபாணி தமிழ்நாடு தலைமைச்செயலகச் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர். கு.வெங்கடேசன் CITU மாநில செயலாளர்

தோழர். C. நாகராசன் கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் தோழர்.B. சந்திரன் சேலம் மாவட்ட செயலாளர் தோழர். P.சுரேஷ் வேலூர் மாவட்டத் தலைவர் தோழர். A. சேகர் முன்னாள் மாநில துணைத்தலைவர் தோழர். K.M. தியாகராஜன் முன்னாள் மாநிலதணிக்கையாளர் தோழர். R.நடராஜன் பாலக்கோடு பேரூராட்சித் தலைவர் திரு.P.K.முரளி பாலக்கோடு அனைத்து வணிகர்கள் சங்க தலைவர் P.N.P.முத்து ஒருங்கிணைப்பாளர் R. சரவணன் வட்ட மாவட்ட நிர்வாகிகள் ஜாக்டோ- ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் தோழமை சங்க பொறுப்பாளர்கள் என 350-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினர். முன்னதாக முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர்.A.சேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றும் தாம் ஆற்றிய சங்கப் பணி, அரசுப் பணி, சமூக பணிகள் குறித்தும் சுயவிமர்சனரீதியில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியின்போது CITU - வின் நிர்மல் பள்ளிக்கு 50,000/= ரூபாயும் TNGEA தருமபுரி மாவட்ட சங்க கட்டட நிதியாக 50,000/= ரூபாயும் இடதுசாரி தொழிற்சங்கத்திற்கு 50,000/= ரூபாயும் தோழர். A. சேகர், அவர்களின் சொந்த நிதியிலிருந்து வழங்கினார். இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர். P.S. இளவேனில் அவர்கள் நன்றி கூறி விழாவினை முடித்து வைத்தார். ●

# சங்க நிகழ்வுகள்




07.03.24 மாலை 5 மணிக்கு, போராடும் வருவாய்த்துறை அலுவலர் சங்க சொந்தங்களுக்கு ஆதரவாக....மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் (புதிய கட்டடம்) ஆதரவு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தலைமை ஜெ. மூர்த்தி மாவட்டத்தலைவர் கோரிக்கை விளக்கவுரைக. நீதிராஜா மாவட்டச்செயலாளர், முகைதீன் அப்துல்காதர் மாவட்டச்செயலாளர் தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்கம். வாழ்த்துரை சு.கிருஷ்ணன் மாவட்டத்தலைவர் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம். நிறைவுரை ஆ.செல்வம், பொதுச்செயலாளர். நன்றி ஜெ.சிவகுரும்பன் வட்டக்கிளைச்செயலாளர். ●



தமிழகம் முழுவதும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மதுரையிலும் காத்திருப்பு போராட்டம் எழுச்சியாக நடைபெற்று வருகிறது. இன்று நடைபெறும் காத்திருப்பு போராட்டத்தை வாழ்த்தும் விதமாக மாவட்டச்செயலாளர் க.நீதிராஜா மாவட்ட இணைச்செயலாளர் ஆ.பரமசிவன், மாநிலச்செயற்குழு உறுப்பினர் இரா.தமிழ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.●




நில அளவையர் வீ.பவ்யா மீது தாக்குதல் நடத்திய ரௌடி முருகானந்தம் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு நில அளவை அலுவலர் ஒன்றிப்பு சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர்தான் க.நீதிராஜா மாவட்ட இணை செயலாளர் ஆ.பரமசிவன் கிழக்கு வட்டக்கிளை செயலாளர் ஜெ.சிவகுரும்பன் வட்டக்கிளைதலைவர் மு.ஆனந்தவள்ளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ●



தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் காலவரையற்ற வேலை நிறுத்தத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக மாலை நேர ஆர்ப்பாட்டம் நடத்தி கோரிக்கை நிறைவேறும் வரை காத்திருப்பு போராட்டம் நடத்துகின்ற அடிப்படையில் மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர்தான் க.நீதிராஜா மாவட்ட இணை செயலாளர் ஆ.பரமசிவன் மாவட்டத் துணைத் தலைவர் ராச.ராசேந்திரன் கிழக்கு வட்டக்கிளை செயலாளர் ஜெ.சிவகுரும்பன் வட்டக்கிளைதலைவர் மு.ஆனந்தவள்ளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ●




தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மைய முடிவுவின்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் 29.03. 2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு தோழர் எம்.ஆர். அப்பன் இல்லத்தில் வைத்து தமிழ்நாடு அரசு சங்கத்தின் மாவட்ட, வட்டக் கிளை, வளாக கிளை நிர்வாகிகளுக்கும், துறைவாரி சங்க நிர்வாகிகளுக்கும், முன்னணி ஊழியர்கள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சி.அ.பாபு, மாவட்டச் செயலாளர் வரவேற்புரையாற்றினார். மாநில பொருளாளர் தோழர் மு. பாஸ்கரன் துவக்கவுரையாற்றினார்.

சங்கத்தின் தலைவர்களை உருவாக்கும் எண்ணத்தின் அடிப்படையிலும், சங்க நிர்வாகிகளுக்கு தலைமை பண்புகள், சங்கத்தின் பணிகள், நிர்வாகிகள் கடமைகள், பொறுப்புகள் குறித்தும், இயக்க நடவடிக்கைகள் திட்டமிடுதல், அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது, ஊழியர்கள் கோரிக்கைகளை கையாள்வது மற்றும் சங்கம் குறித்து தலைமை பண்புகள் என்ற தலைப்பில் பொதுச்செயலாளர் தோழர் ஆ. செல்வம் அவர்கள் வகுப்பு எடுத்தார்., இந்திய வரலாறும் திரிவுகளும் என்ற தலைப்பில் தோழர் அன்வர் உசேன் முன்னாள் செயலாளர் பிஎச் எல் சி ஐ டி யு அவர்கள் பயிற்சி வகுப்பு எடுத்தார். ஏ.பெரியசாமி, மாநில துணைத் தலைவர் நிறைவுரையாற்றினார். கா. சிவசங்கர் மாவட்ட பொருளாளர் நன்றியுரையாற்றினார். பயிற்சி வகுப்பில் மாவட்ட நிர்வாகிகள் நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் வளாக கிளை நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் மற்றும் அனைத்து துறை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். ●

கவிதை

# வெற்றிக்கனியை பெற்றிடுவோம்

**– A.R.கவிதா**

பாலின சமத்துவம் வேண்டுமென்று
பல்லாண்டு காலமாய் குரலெழுப்பி
சாதனை பலவும் நிகழ்த்தி விட்டோம்
சரித்திர பக்கங்கள் நிரப்பி விட்டோம்

இன்னமும் எங்களை ஏற்றுக்கொள்ள
இயலாமல் புலம்புவோர் கூட்டணியாய்
முட்டுக்கட்டைகள் பல போடுகின்றனர்
முடக்கிட திட்டங்கள் தீட்டுகின்றார்.

சூரியக் கதிர்களை மறைத்திடவே
சூழ்ந்திடும் மேகங்கள் திரளும் போது,
வீசிடும் காற்றதை கலைத்துப் போடும்
வீரமிக்க பெண்கள் போராட்டம் போல்..

அச்சம் என்பதை அழித்திடுவோம் அன்புடன்
வீரம் கலந்திடுவோம்
பெண்ணை ஒடுக்கிடும் ஆணாதிக்க
எண்ணங்கள் அனைத்தையும்
தகர்த்திடுவோம்

ஏற்றத் தாழ்வுகள் நீங்கிவிடும்..
ஏற்படும் புதுயுகப் புரட்சி இங்கு
மகளிர் தினம் என்னும் மலர்ச்சி தினம்
மலர்த்தட்டும் இவ்வுலகை வருங்காலத்தில்..

அரசு ஊழியர் பெண்கள் நாங்கள்
அத்தனை பேரும் இணைந்திடுவோம்
நம்மால் முடியாதது ஏதுமில்லை
நாமே மாற்றத்தின் ஆணி வேர்கள்..

ஒன்றுபட்ட எங்கள் முன்னே
ஒவ்வொரு தினமும் வெற்றி தினம்...
வெல்வோம் வெல்வோம் வென்றிடுவோம்..
வெற்றிக்கனியை பெற்றிடுவோம் ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# மாநாட்டு நிகழ்வுகள்


























Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.04.2024

## கருத்துரையாளர்கள்


மு.அன்பரசு


ஆ.செல்வம்


அ.ச.குமரி


ரோகிணி


சி.பரமேஸ்வரி


தெ.வாசுகி


கோ.பழனியம்மாள்


மு.செல்வராணி


உ.சுமதி


ச.ஹேமலதா












Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com